தின பூமி
thinaboomi.com
பூமி: 23 சுற்று: 339 ஐப்பசி 19
புதுச்சேரி, புதன், நவம்பர் 05, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**பாகிஸ்தானும் அணு ஆயுத சோதனையில் ஈடுபடுகிறது: அதிபர் ட்ரம்ப் தகவலால் பரபரப்பு**
....2-ம் பக்கம்

**பொங்கல் பண்டிகைதோறும் மகளிருக்கு ரூ.30 ஆயிரம் நிதி: தேஜஸ்வி யாதவ் வாக்குறுதி**
...3-ம் பக்கம்

**ஐ.சி.சி. மகளிர் புதிய பேட்டிங் தரவரிசை: ஜெமிமா முன்னேற்றம்**
....6-ம் பக்கம்





● தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன் தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார். உடன் தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, எ.வ.வேலு, அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பி.கே.சேகர்பாபு, கனிமொழி எம்.பி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், திருநெல்வேலி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், வழக்கறிஞர் சலீம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு தேதி வெளியீடு

சென்னை, நவ. 05-

**தமிழகத்தில் 10, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான அட்டவணை மற்றும் தேர்வு முடிவுகள் வெளியாகும் தேதி குறித்த அறிவிப்புகளை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டார்.**

முன்னதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் இது குறித்து கூறுகையில், "நவம்பர் 4-ம் தேதி மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அந்தக் கூட்டத்தில் பொதுத் தேர்வு அட்டவணை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும். கூட்டத்தின் நிறைவில் அன்றைய தினமே 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு அட்டவணைகள் வெளியிடப்படும் என்று கூறி இருந்தார். மேலும் 2026-ம் ஆண்டு சட்ட சபை தேர்தல் நடைபெற உள்ளதால், அதைக் கருத்தில் கொண்டு தேர்வு நடைபெறும் தேதி தயாரிக்கப்படும் என்று தகவல் வெளியாகி இருந்தது.

### 10-ம் வகுப்பு தேர்வு அட்டவணை

| | | |
|---|---|---|
| 1) | மார்ச் 11 | - தமிழ் மற்றும் மொழிப்பாடம். |
| 2) | மார்ச் 16 | - ஆங்கிலம். |
| 3) | மார்ச் 25 | - கணிதம். |
| 4) | மார்ச் 30 | - அறிவியல். |
| 5) | ஏப்ரல் 2 | - சமூக அறிவியல். |
| 6) | மே 20 | - தேர்வு முடிவு வெளியீடு. |

### 12-ம் வகுப்பு தேர்வு அட்டவணை

| | | |
|---|---|---|
| 1) | மார்ச் 2 | - தமிழ். |
| 2) | மார்ச் 5 | - ஆங்கிலம். |
| 3) | மார்ச் 9 | - வேதியல். |
| 4) | மார்ச் 13 | - இயற்பியல். |
| 5) | ஏப்ரல் 17 | - கணிதவியல். |
| 6) | மே 8 | - தேர்வு முடிவு வெளியீடு. |

இந்நிலையில் சென்னையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் நேற்று செய்தியாளர்களை சந்தித்து வெளியிட்ட அறிவிப்பில், "2026-ம் ஆண்டு மார்ச் 2-ம் தேதி முதல் மார்ச் 26-ம் தேதி வரை 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு நடைபெறும். பிளஸ் 2 செய்முறை தேர்வுகள் பிப்ரவரி 9 முதல் பிப்ரவரி 14-ம் தேதி வரை நடைபெறும். மே.8-ம் தேதி பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கான முடிவுகள் வெளியாகும்.

மார்ச் 3-ம் தேதி முதல் மார்ச் 27-ம் தேதி வரை பிளஸ் 1 தேர்வுகள் நடைபெறும். 11-ம் வகுப்பில் தவறிய மாணவர்களுக்கு மார்ச் 3-ம் தேதி முதல் மறுதேர்வு நடைபெறும். 11-ம் வகுப்புக்கான செய்முறைத் தேர்வுகள் பிப்ரவரி 16 முதல் பிப்ரவரி 21 வரை நடைபெறுகிறது.

மார்ச் 11-ம் தேதி முதல் ஏப்ரல் 6-ம் தேதி வரை 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும். 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே 20-ம் தேதி வெளியாகிறது. 12-ம் வகுப்பு பொதுத் தேர்வை 8.07 லட்சம் மாணவர்களும், 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வை 8.70 லட்சம் மாணவர்களும் எழுத உள்ளனர். கணக்குப்பதிவியல் தேர்வுகளுக்கு மாணவர்கள் கால்குலேட்டர் எடுத்துச் செல்லலாம். ஒவ்வொரு தேர்வுக்கும் 3 முதல் 5 நாட்கள் இடைவெளி இருக்கும் வகையில் தேர்வு அட்டவணை வடிவமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## பீகார் சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு

# அனல் பறந்த முதல்கட்ட தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது

## 121 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு

பாட்னா, நவ. 05-

**பீகாரில் முதல்கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் ஓய்ந்தது. இதன் காரணமாக பிரதமர் மோடி உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் மகா கூட்டணியின் தலைவர்கள் நேற்று தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.**

243 தொகுதிகளைக் கொண்ட பீகார் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நவம்பர் 6 மற்றும் 11-ம் தேதிகளில் இரு கட்டங்களாக நடைபெறுகிறது. இதில் நவம்பர் 6-ல் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 18 மாவட்டங்களில் உள்ள 121 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நேற்று மாலை 5 மணியுடன் பிரச்சாரம் ஓய்ந்தது. இந்தச் சூழலில், வாக்காளர்களை கவரும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் மகா கூட்டணியின் தலைவர்கள் நேற்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா நேற்று போஜ்பூர் மற்றும் கயாவில் தேர்தல் பிரச்சாரங்களில் உரையாற்றினார். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வைஷாலி, பாட்னா, சஹர்சா மற்றும் முங்கர் மாவட்டங்களில் நடக்கும் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றினார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தர்பங்கா, கிழக்கு சம்பாரண் மற்றும் மேற்கு சம்பாரண் மாவட்டங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்.

பிரதமர் நரேந்திர மோடி நேற்று (நவம்பர் 4) பீகாரில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பெண் தொண்டர்களுடன் கலந்துரையாடினார். பிரதமர் மோடியின் எக்ஸ் பதிவில், "பீகாரில் பெண்கள் சக்தி சட்டப்பேரவை தேர்தல்களில் பா.ஜ.க. - தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றியை உறுதி செய்வதற்காக அசாதாரண ஆற்றலுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்பட்டு வருகிறது. தேர்தல் பிரச்சாரத்தில் பெண்களின் பங்கேற்பு பீகாரில் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்துகிறது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

முதல்கட்ட தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி நாளான நேற்று மகா கூட்டணியின் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் கயா மற்றும் ஔரங்காபாத்தில் பிரச்சாரம் செய்தனர். மகாகட்பந்தனின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி பிரசாத் யாதவ், சமஸ்திபூர், பெகுசராய், சஹர்சா, தர்பங்கா, முசாபர்பூர் மற்றும் வைஷாலி மாவட்டங்களில் உள்ள பல்வேறு தொகுதிகளில் 17 தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றினார். அதேபோல மகா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் கயாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

# 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு

சென்னை, நவ. 05-

**வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மியான்மர் கடலோர பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தில் 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

தமிழகத்தில் 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மியான்மர் கடலோர பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெறக்கூறும். இதன் காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த 7 நாட்கள் ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிகழ்ந்த துயரம் மனிதத்தன்மையற்றது; கோவை வன்கொடுமை சம்பவத்தில்

# குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தரப்படும்

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, நவ. 05-

**கோவையில் இளம் பெண்ணிக்கு நிகழ்ந்த துயரம் மனிதத்தன்மையற்றது என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவை வன்கொடுமை சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தரப்படும் என்று அவர் உறுதிபட தெரிவித்துள்ளார்.**

**மருத்துவமனையில்....**

கோவை விமான நிலையத்தின் பின்புறம் கல்லூரி மாணவி ஒருவர் தனது ஆண் நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத 3 நபர்கள், ஆண் நண்பரை கடுமையாகத் தாக்கிவிட்டு, மாணவியை தூக்கிச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பாதிப்புக்குள்ளான அம்மாணவி, காவல்துறையினரால் மீட்கப்பட்டு, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த 3 பேரையும் தனிப்படை போலீசார் சுட்டுப் பிடித்தனர். குணா தவசி, சதீஸ், கார்த்திக் காளீஸ்வரன் ஆகிய 3 பேரையும் போலீசார் சுட்டுப்பிடித்தனர்.

**மனிதத்தன்மையற்றது...**

கோவையில் கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் 3 பேரை போலீசார் துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர். இந்த நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; கோவையில் இளம்பெண்ணுக்கு நிகழ்ந்த துயரம் மனிதத்தன்மையற்றது. இத்தகைய கொடூர குற்றச் செயல்களைக் கண்டிக்க எந்தக் கடுஞ்சொல்லும் போதாது. இதில் ஈடுபட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மாதத்திற்குள் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை விரைந்து பெற்றுத் தர, காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

**முற்போக்குச் சமூகமாக...**

மேலும் மேலும் நம் மகளிர் அனைத்துத் துறைகளிலும் அடையும் முன்னேற்றம் தான் இத்தகைய வக்கிர மிருகங்களின் ஆணாதிக்க மனநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும். முழுமையான முற்போக்குச் சமூகமாக நாம் மாறுவதற்கு வழிவகுக்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளம்பெண் பாலியல் வன்கொடுமை:

# கோவையில் குற்றவாளிகள் சுட்டுப்பிடிக்கப்பட்டது ஏன்?

## காவல் ஆணையர் சரவணசுந்தர் விளக்கம்

கோவை, நவ. 05-

**கோவை பாலியல் வழக்கில் 3 பேர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது குறித்து கோவை மாநகர காவல் ஆணையர் சரவணசுந்தர் விளக்கம் அளித்துள்ளார்.**

இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த அவர், கூறியதாவது; கோவை விமான நிலைய சுவருக்கு பின்னால் இந்த சம்பவம் நடந்துள்ளது. கார் கண்ணாடியை உடைத்து, ஆண் நண்பரை தாக்கிவிட்டு, மாணவியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். 3 பேரும் மது அருந்திவிட்டு இந்த குற்ற செயலில் ஈடுபட்டுள்ளனர். பாலியல் வன்கொடுமை சம்பவம் திட்டமிட்டு நடந்ததாக தெரியவில்லை.



பாலியல் வழக்கில் 7 தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை தேடினோம். சில ரகசிய தகவலில் அடிப்படையில் மூன்று குற்றவாளிகளையும் அடையாளம் கண்டோம். பொதுமக்கள் வைத்த பல சி.சி.டி.வி. கேமராக்கள் வேலை செய்யவில்லை. வழக்கில் 300 சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து 3 பேரையும் அடையாளம் கண்டோம். நேற்று முன்தினம் இரவு சுமார் 11 மணி அளவில் குற்றவாளிகள் துப்பாக்கியால் சுட்டுப் பிடிக்கப்பட்டனர். காவலர்களை தாக்கி தப்ப முயன்றதால் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் சதீஷ், கார்த்தி ஆகியோர் சகோதரர்கள். குணா என்பவர் அவர்களது உறவினர். மூவர் மீதும் கொலை வழக்கு உள்ளது. மூவரும் அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் கிடையாது. மூவர் மீதும் குண்டர் தடுப்பு சட்டம் பாய்ந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களை காவலில் எடுத்து விசாரிக்க திட்டமிட்டுள்ளோம்.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட மாணவியின் உடல்நிலை சீராக உள்ளது. பாதிக்கப்பட்ட மாணவிக்கு உளவியல் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவசர காலங்களில் காவலன் மொபைல் செயலியை பயன்படுத்த வேண்டும். குற்ற சம்பவம் குறித்து தகவல் சொல்ல கூட நேரமில்லாத நேரங்களில், காவலன் செயலியில் உள்ள எஸ்.ஓ.எஸ். பட்டனை அழுத்தினால் சம்பவ இடத்தை காவல்துறை எளிதாக கண்டறிய முடியும். சம்பவம் தொடர்பாக அவதூறு கருத்துகளை பரப்ப வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் தொடங்கியது

சென்னை, நவ. 05-

**தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் தொடங்கியது.**

வாக்காளர் படியலில் இறந்தவர்கள், முகவரி மாறியவர்களின் பெயர்கள் இடம் பெற்று உள்ளன. பல வாக்காளர்களின் பெயர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளிலும் உள்ளன. எனவே தகுதியான வாக்காளர்களை மட்டுமே பட்டியலில் இடம் பெற செய்ய வேண்டும். போலி வாக்காளர்களை நீக்க வேண்டும் என்பதற்காக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் முடிவெடுத்து உள்ளது.

அதன்படி, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து சட்டசபை தொகுதிகளிலும் நேற்று முதல் டிசம்பர் 4-ம் தேதி வரை வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணியை அரசியல் கட்சிகளின் பூத் ஏஜெண்டுகள் துணையுடன் அரசு ஊழியர்கள் மேற்கொள்ள உள்ளனர்.

இதைத்தொடர்ந்து வரைவு வாக்காளர்கள் பட்டியல் டிசம்பர் 9-ம் தேதியும் இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 7-ம் தேதியும் வெளியிடப்பட உள்ளன. இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை ஒத்திவைக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழகத்தில் நேற்று முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடங்கியது.

தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கிடையே எஸ்.ஐ.ஆர். பணிகள் தொடங்கியது. ராமநாதபுரத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பாக வீடு வீடாக சென்று படிவம் கொடுக்கும் பணி தொடங்கியது. ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமியின் வீட்டுக்கு நேரில் சென்று தேர்தல் அலுவலர்கள் விண்ணப்பம் அளித்தனர். திருச்சியில் தேர்தல் அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று திருத்தப் பணிக்கான விண்ணப்பங்களை அளிக்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் ஏஜெண்டுகளுடன் இணைந்து அரசு ஊழியர்கள் வாக்காளர்களை கணக்கெடுக்கவுள்ளனர். மக்கள் படிவத்தை பூர்த்தி செய்த பிறகு மீண்டும் வீடு வீடாக சென்று அதிகாரிகளே பெற்றுக் கொள்வார்கள். டிசம்பர் 4 வரை வாக்குச் சாவடி நிலை அலுவலர் வீடு தோறும் சென்று பணி மேற்கொள்வார். எஸ்.ஐ.ஆர். பணி முடிந்த பிறகு வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 9ம் தேதி வெளியிடப்பட உள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் மேற்கொள்ள டிச.9 முதல் ஜனவரி 1 வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.


எஸ்.ஐ.ஆர். பணிகள் நிறைவடைந்த பிறகு பிப்ரவரி 7ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -519.34 | -165.70 |
| பாயின்ட் 83,459.15 | பாயின்ட் 25,597.65 |



**தங்கம்** 1 சவரன் ₹90,000 | 1 கிராம் ₹11,250



**வெள்ளி** 1 கிலோ ₹165,000 | 1 கிராம் ₹165.00

**டாலர்** ₹88.72

**பெட்ரோல்** ₹100.75 **டீசல்** ₹92.34

# பாகிஸ்தானும் அணு ஆயுத சோதனையில் ஈடுபடுகிறது

## அதிபர் ட்ரம்ப் தகவலால் பரபரப்பு

**வாஷிங்டன், நவ. 05-**

ரஷ்யாவும், சீனாவும் அணு ஆயுத சோதனைகளில் ஈடுபடுகின்றன என்று தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பாகிஸ்தானும் அணு ஆயுத சோதனையில் ஈடுபடுகிறது என்று தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த மாத இறுதியில் ஆசிய நாடுகளுக்கு 5 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது ட்ரம்பின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ரஷியா அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணை சோதனையில் ஈடுபட்டது. ஆனால், ஏவுகணை அணு ஆயுத வல்லமைபெற்றதல்ல என்று ரஷ்யா தெரிவித்தது. இதனிடையே, ஆசிய பயணத்தை நிறைவு செய்து அமெரிக்கா திரும்பிய ட்ரம்ப் அணு ஆயுத சோதனை நடத்த அந்நாட்டு பாதுகாப்புத்துறைக்கு உத்தரவிட்டார். இதன் மூலம் 33 ஆண்டுகளுக்குப்பின் அமெரிக்காவில் அணு ஆயுத சோதனை நடைபெற உள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில், ரஷ்யாவும், சீனாவும் அணு ஆயுத சோதனைகளில் ஈடுபடுகின்றன. ஆனால் இதுகுறித்து அவர்கள் பேச மாட்டார்கள். ஆனால் நாம் அப்படி இல்லை. நாம் வேறுபட்டவர்கள். வெளிப்படையான சமூகம். நாம் சோதனைகளை நடத்தப் போகிறோம் என வெளிப்படையாக கூறியுள்ளோம். மற்றவர்களும் அணு ஆயுத சோதனைகளை நடத்தித்தான் வருகிறார்கள். வடகொரியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றார்.

# ஐதராபாத் அருகே சாலை விபத்து: 3 சகோதரிகள் பலியான சோகம்

**தெலங்கானா, நவ. 05-**

தெலங்கானாவின் ரங்கா ரெட்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை நடந்த விபத்தில், அரசு பேருந்தில் ஒரே இருக்கையில் அமர்ந்து ஐதராபாத் சென்ற 3 சகோதரிகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இதனை அறிந்த அவர்களின் பெற்றோர், உற்றார், உறவினர்கள் கதறி அழுதனர்.



விகாராபாத் மாவட்டம், தாண்டூரு நகர்ப்புறத்தில் உள்ள காந்திநகரைச் சேர்ந்தவர் எல்லையா கவுட். இவருக்கு 4 மகள்கள். மூத்த மகளுக்கு திருமணம் செய்துள்ளார். எஞ்சியுள்ள தனுஷா, சாய்பிரியா, நந்தினி ஆகிய மூவரும் ஐதராபாத்தில் படித்து வந்தனர்.

இந்நிலையில், இவர்களின் உறவினர்களின் திருமணம் கடந்த மாதம் 15-ம் தேதி தாண்டூரில் நடந்தது. இதற்காக 3 மகள்களும் ஐதராபாத்தில் இருந்து வந்திருந்தனர். திருமண நிகழ்ச்சியில் மிகவும் மகிழ்ச்சியோடு கலந்து கொண்ட இவர்கள், நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீண்டும் கல்லூரிகளுக்கு செல்ல தாண்டூர் ரயில் நிலையத்துக்கு சென்றுள்ளனர். அங்கு ரயில் சென்றுவிடவே, இவர்களின் தந்தையான எல்லையா மூன்று மகள்களையும் அந்த வழியாக வந்த அரசு பேருந்தில் ஏற்றினார். அவர் வீடு போய் சேருவதற்குள், அந்த பேருந்து டிப்பர் லாரி மோதி விபத்துக்குள்ளாகி சகோதரிகள் மூவரும் ஒரே இருக்கையில், ஜல்லி கற்களில் சிக்கிக் கொண்டு பரிதாபமாக உயிரிழந்த தகவல் கிடைத்தது.

மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்த 3 மகள்களின் சடலங்களைப் பார்த்து பெற்றோர், உற்றார், உறவினர்கள் கதறி அழுதது நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

## என்னை சீண்ட வேண்டாம்:

# அன்புமணிக்கு அருள் எம்.எல்.ஏ. எச்சரிக்கை

**சேலம், நவ. 05-**

அன்புமணி பற்றிய பல உண்மைகளை தெரியும் என்று தெரிவித்துள்ள பா.ம.க. எம்.எல்.ஏ. அருள், என்னை சீண்ட வேண்டாம் என்று அன்புமணிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சேலம் வாழப்பாடியில் பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் மற்றும் அவருடைய ஆதரவாளர் சென்ற கார்கள் மீது நேற்று திடீரென தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. அப்போது, ஆதரவாளர்கள் தடுக்க முயன்றபோது அவர்கள் மீதும் தாக்குதல் நடந்துள்ளது. பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் ஆதரவாளராக எம்.எல்.ஏ. அருள் இருந்து வருகிறார்.

அவருக்கு ஆதரவாக அவ்வப்போது பேசியும், கருத்துகளை கூறியும் வருகிறார். பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மற்றும் அன்புமணி ராமதாஸ் ஆகியோருக்கு இடையே இணக்கமற்ற சூழல் காணப்படும் நிலையில், இந்த தாக்குதல் நடந்துள்ளது. தாக்குதலில் ஈடுபட்டவர்களை போலீசார் தடுக்க வந்தனர். அப்போது, தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கற்களை கொண்டும் வீசினர். கட்டைகள், தடிகள் உள்ளிட்டவற்றை கொண்டும் தாக்கி உள்ளனர். இந்த சம்பவத்தில் 6 கார்கள் உடைக்கப்பட்டு உள்ளன. 10-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இதுபற்றி பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் செய்தியாளர்களை சந்தித்து பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, சேலம் வாழப்பாடியில் எங்களை இடைமறித்து வாகனங்களை தாக்கினர். என் மீது நடந்த தாக்குதலுக்கு அன்புமணிதான் காரணம். அன்புமணி என்னை சீண்ட வேண்டாம். அவர் அடியாட்களை அனுப்பி தாக்க முயன்றது வருத்தம் அளிக்கிறது. அன்புமணி பற்றிய பல உண்மைகள் எனக்கு தெரியும் என்று கூறினார்.

அவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றி கூறும்போது, என்னுடைய ஆதரவாளர் கார் மீது தாக்குதல் நடந்துள்ளது. என்னை, இருவர் கத்தியால் கொல்ல முயன்றனர். கட்டை, கத்தி மற்றும் கம்பிகளை கொண்டு தாக்கினர். போலீசார் எனக்கு பாதுகாப்பு தருவார்கள் என நம்புகிறேன். நான் ஒரு எம்.எல்.ஏ. சட்டத்தின் மீது மதிப்பு வைத்திருக்கிறேன். நான் தவறு செய்தால் என்ன நடவடிக்கை வேண்டுமென்றாலும் எடுக்கலாம் என்று கூறியுள்ளார்.

# இமயமலையில் திடீர் பனிச்சரிவு: மலையேற்ற வீரர்கள் 7 பேர் பலி

**காத்மாண்டு, நவ. 05-**

இமயமலையில் பனிச்சரிவில் மலையேற்ற வீரர்கள் 7 பேர் உயிரிழந்தனர்.

இந்தியா - நேபாளம் எல்லையில் இமயமலை உள்ளது. இமயமலையில் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள், மலையேற்ற வீரர்கள் மலை ஏறும் சாகசத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், நேபாளத்தின் டொலஹா மாவட்டத்தில் இருந்து நேற்று முன்தினம் உள்நாடு, வெளிநாடுகளை சேர்ந்த மலையேற்ற வீரர்கள் 15 பேர் இமய மலையில் ஏறியுள்ளனர். மலையில் 5 ஆயிரத்து 630 மீட்டர் உயரத்தில் உள்ள யலொங் ரி சிகரத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமில் மலையேற்ற வீரர்கள் தங்கி இருந்தனர்.

அப்போது அந்த முகாமில் பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் மலையேற்ற வீரர்கள் பனிச்சரிவில் சிக்கிக்கொண்டனர். இந்த சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 4 பேர் பனிச்சரிவில் சிக்கி மாயமாகினர். அதேவேளை, 4 வீரர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டனர். உயிரிழந்த 7 பேரில் 3 பேர் அமெரிக்காவையும், ஒருவர் இத்தாலியையும், ஒருவர் கனடாவையும், இருவர் நேபாளத்தையும் சேர்ந்தவர்கள் ஆவர். காயமடைந்த 4 பேர் மீட்கப்பட்ட நிலையில் மாயமான 4 பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

# ரஷ்யாவில் நிலநடுக்கம்

**மாஸ்கோ, நவ. 05-**

ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கம்சாட்கா தீபகற்பத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நேற்று முன்தினம் மதியம் 12.40 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 52.41 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 159.93 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. இதனையடுத்து, நேற்று முன்தினம் மதியம் 2.14 மணியளவில் அப்பகுதியில் ரிக்டர் 6.1 அளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

# தங்கம் விலை சரிவு

**சென்னை, நவ. 05-**

தங்கம் விலை நேற்று சரிந்து விற்பனையானது. அதன்படி கிராமுக்கு ரூ.100-ம், சவரனுக்கு ரூ.800-ம் குறைந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.11,250-க்கும், சவரன் ரூ.90,000-க்கும் விற்பனையானது. அதேபோல, வெள்ளியின் விலையும் குறைந்து விற்பனையானது.

தங்கம் விலை கடந்த சில நாட்களுக்கு முன்பு உச்சத்தை தொட்டது. ஒரு சவரன் தங்கம் ரூ.97 ஆயிரத்தை தாண்டி விற்பனை செய்யப்பட்டது. தினமும் காலை, பிற்பகல் என இரு வேளைகளிலும் தாறுமாறாக விலை உயர்ந்து வந்தது. இதே வேகத்தில் சென்றால், ஒரு சவரன் ரூ.1 லட்சத்தையும் தாண்டிவிடும் என்றெல்லாம் வியாபாரிகள் கூறி வந்தனர். இப்படி இருந்த சூழல் அப்படியே தலைகீழாக மாறியது. விலை ஏற்றம் ராக்கெட் வேகத்தில் இருந்த நிலையில், கடந்த 18-ந் தேதியில் இருந்து விலை இறக்கம் சீட்டுக்கட்டு போல சரியத் தொடங்கியது.

இதனைத்தொடர்ந்து தங்கம் விலை கடந்த சில நாட்களாக ஏற்ற, இறக்கமாக இருந்து வருகிறது. இந்த சூழலில் வாரத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் சென்னையில் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.320 உயர்ந்திருந்தது. அதன்படி ஆபரண தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.40 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 350-க்கு விற்பனையானது. அதேசமயம் சவரனுக்கு ரூ.320 உயர்ந்து ஒரு சவரன் ரூ.90 ஆயிரத்து 800-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல், வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.2 உயர்ந்து ஒரு கிராம் ரூ.168-க்கும், கிலோ ரூ.2 ஆயிரம் உயர்ந்து பார் வெள்ளி ரூ.1 லட்சத்து 68 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில் நேற்று தங்கம் விலை சரிவை சந்தித்து விற்பனையானது. அதன்படி கிராமுக்கு ரூ.100-ம், சவரனுக்கு ரூ.800-ம் குறைந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.11,250-க்கும், சவரன் ரூ.90,000-க்கும் விற்பனையானது.

அதேபோல, வெள்ளியின் விலையும் குறைந்து விற்பனையானது. இதன்படி வெள்ளிவிலை கிராமுக்கு ரூ.3 குறைந்து, ஒரு கிராம் ரூ.165க்கும் ஒரு கிலோ வெள்ளி ரூ.1 லட்சத்து 65 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

# பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு


**மேட்டூர், நவ. 05-**

டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையில் இருநது தண்ணீர் திறப்பு வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.;

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில் டெல்டா பாசன பகுதிகளில் பெய்த மழை நின்றதால் பாசனத்திற்கான தண்ணீர் தேவை அதிகரித்தது. இதையடுத்து அணையில் இருந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

இதனிடையே டெல்டா பாசன பகுதிகளில் தண்ணீர் தேவை மேலும் அதிகரித்ததால் நேற்று முன்தினம் முதல் தண்ணீர் திறப்பு வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கால்வாய் பாசன தேவைக்கு தொடர்ந்து வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. நேற்று காலை நிலவரப்படி அணை நீர்மட்டம் 118.99 அடியாக இருந்தது.

**05-11-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** மனைவியை மகிழ்வித்து நீங்களும் மகிழ்வீர்கள். வருமானம் பெருகி வளமும் பெருகும். இனிய பயணங்களால் இன்பம் பெருகும். உண்மையாக உழைத்தால் வாழ்க்கையில் உயர்வும், வெற்றியும் கிடைக்கும்.

**ரிஷபம்:-** வேலைப்பளு காரணமாக வேளைக்கு உண வருந்த முடியாத நிலை ஏற்படும். முன்கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**மிதுனம்:-** கெட்டி மேளம் கோட்டும் காலம் வரலாம். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. பலவகைகளிலும் பணம் வந்து குவியும் நண்பர்கள் சந்திப்பாலும், தெய்வ பக்தியாலும் மனநிம்மதி கூடும்.

**கடகம்:-** அதிக தனலாபங்களை எதிர்பார்க்கலாம். நல்ல நண்பர்களின் உதவிகள் கிடைக்கும், எதிர்பாலரைக் கவரும் வண்ணம், நேர்த்தியாக ஆடை அணிவீர்கள். அஜீரணம் குறைய அளவோடு உண்ணுங்கள்.

**சிம்மம்:-** அதிகாரப் பதவிகள் கிடைத்து வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். தீர்த்த யாத்திரை செல்லும் பாக்கியம் ஏற்படும். நல்ல காரியங்களில் ஈடுபடுவதால் புகழ் ஓங்கும்.

**கன்னி:-** கோர்ட், கேசுகளில் வெற்றி காண அவற்றை ஒத்திப் போடுவது நல்லது. உயர் அதிகாரிகளிடம் பணிவின்றி நடந்தால் பிரச்சனைகள் எழும். எனவே, பணிவு அவசியம்.

**துலாம்:-** வாகன சுகங்கள் உண்டாகும். புதிய சொத்துக்கள் அமையும். விரும்பிய பொருட்கள், விரும்பியபடிக் கிடைக்கும். கல்வியில் வெற்றிபெற கடின உழைப்புத் தேவை.

**விருச்சிகம்:-** ஆசைப்பட்ட பொருட்கள் அனைத்தும் அகம் வந்து சேருவதால், மனமகிழ்ச்சி நிறைந்த நாளாக மலரும். மற்றவர்களை ஆணையிடும் உயர் அதிகாரபதவி கிடைக்கலாம்.

**தனுசு:-** குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. தடைபடும் காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். பணவிரயம் ஏற்பட அமைதியற்ற வாழ்க்கை அமையும்.

**மகரம்:-** தாயின் ஆரோக்கியத்தில் தனிக் கவனம் செலுத்துங்கள். வாகனங்களில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பயணசுகம் குறையும். தண்ணீரைவிட்டு எச்சரிக்கையுடன் தள்ளியே இருக்கவும்.

**கும்பம்:-** அதிக தனலாபம் கிடைக்கும். புதிய நண்பர்கள், எதிர் பாலர்பால் ஈர்ப்பு மற்றும் இன்பமும் ஏற்றங்களும் ஏற்படும். தொழிலில் ஆர்வம் கூடுவதால், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**மீனம்:-** ஓரளவு பணவரவு இருக்கும். பிறரின் நடவடிக்கைகளால் மன சஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. வீண் வழக்குகளால் வெட்டிச் செலவுகள் ஏற்படலாம்.

## கோவை பாலியல் வன்கொடுமை:

# அ.தி.மு.க. மகளிர் அணி ஆர்ப்பாட்டம்



**கோவை, நவ. 05-**

கோவை பாலியல் வன்கொடுமை துப்பாக்கியால் சுடப்பட்ட வர்கள் உண்மை குற்றவாளிகளா? என்று முன்னாள் அமைச்சர் வளர்மதி கேள்வி.

கோவையில் மாணவி கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து அ.தி.மு.க. மகளிர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். அதன்படி அ.தி.மு.க. ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிர் அணி சார்பில் கோவை செஞ்சிலுவை சங்கம் அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

கல்லூரி மாணவிக்கு நிகழ்ந்த பாலியல் வன்கொடுமையை கண்டித்தும், சட்டம்-ஒழுங்கை பாதுகாக்க தவறிய தி.மு.க. ஆட்சியை கண்டித்தும் இந்த போராட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு அ.தி.மு.க. மகளிர் அணி செயலாளர் பா.வளர்மதி தலைமை தாங்கினார். மகளிர் அணி நிர்வாகிகள் லீலா உண்ணி, விமலா கண்ணம்மாள் முன்னிலை வைத்தனர். மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் அம்மன் அர்ச்சுனன் எம்.எல்.ஏ. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் கே.ஆர். ஜெயராம், சூலூர் கந்தசாமி, முன்னாள் எம்.எல்.ஏ. மகஸேஸ்வரி ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி பேசியதாவது:-

கோவையில் கல்லூரி மாணவி பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். அவரை பலாத்காரம் செய்தவர்கள் முட்புதரில் தூக்கி வீசி உள்ளனர். அப்போது அவர் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கதறி உள்ளார். அவர் கதறி அழுத பின்னரும் வக்கிர புத்தியுள்ள அந்த கும்பல் அவரை விடாமல் சீரழித்துள்ளது.

இந்த சம்பவத்தை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தலைமை நிலைய செயலாளர் வேலுமணி ஆகியோர் கண்டித்துள்ளனர். எடப்பாடி பழனிசாமி அறிவிப்பின்பேரில் இன்று ஆர்ப்பாட்டம் நடக்கிறது. இந்த சம்பவத்தில் 3 குற்றவாளிகளை போலீசார் சுட்டுப்பிடித்துள்ளதாக கூறி உள்ளனர். ஆனால் அவர்களை யாருக்கும் காட்டவில்லை. அவர்கள் உண்மை குற்றவாளிகளா அல்லது போலி குற்றவாளிகளாக என்ற சந்தேகம் உள்ளது.

இந்த சம்பவத்துக்கு அ.தி.மு.க. தலைவர்கள் கண்டித்துள்ள நிலையில் பொள்ளாச்சி சம்பவத்தில் கவர்னரை சந்தித்து மனு கொடுத்த கனிமொழி எம்.பி. இதுவரை வாய் திறக்கவில்லை. அதேபோல கம்யூனிஸ்டு மற்றும் தி.மு.க. கூட்டணி கட்சியினரும் கண்டனம் தெரிவிக்கவில்லை. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் இருந்த போலீசார் தற்போது இல்லை. தி.மு.க. ஆட்சியில் 4150 குழந்தைகள் முதல் பெண்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோவை மாநகரம் தொழில் நகரம். இங்கு ஏராளமானோர் வந்து செல்லும் விமான நிலையத்தின் அருகிலேயே இந்த கொடூர சம்பவம் நடந்துள்ளது. இதில் உண்மை குற்றவாளிகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## சிறப்பு வாக்காளர் திருத்தப்பணி:

# பொதுமக்கள் கவனிக்க வேண்டியவை என்ன?

**சென்னை, நவ. 05-**

சிறப்பு வாக்காளர் திருத்தப்பணியின் போது பொதுமக்கள் கவனிக்க வேண்டியவை குறித்து அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் சிறப்பு வாக்காளர் திருத்தப்பணிகள் நேற்று (செவ்வாய்கிழமை) தொடங்கி உள்ளது. சிறப்பு வாக்காளர் திருத்தப் பணியின் போது பொதுமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விவரங்கள் வருமாறு:-

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் நேற்று முதல் (4-ந் தேதி) முதல் டிசம்பர் 4-ந் தேதி வரை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று தற்போதுள்ள வாக்காளர்களின் முன் அச்சிடப்பட்ட விவரங்களுடன் கூடிய கணக்கீட்டு படிவத்தினை இரட்டை பிரதிகளில் விநியோகிப்பார்கள். அப்போது, அவர்களே வாக்காளர்கள் படிவத்தை நிரப்புவதற்கும் வழிகாட்டுவர்.

கணக்கீட்டு நேரத்தில் எந்தவொரு வீடும் பூட்டப்பட்டிருப்பதை அல்லது மூடப்பட்டிருப்பதை வாக்குச்சாவடி நிலை அலுவலர் கண்டறிந்தால், அவர் கணக்கீட்டு படிவங்களை அந்த வீட்டிலேயே வைத்துவிட்டு வருவார். அந்த படிவங்களை பொதுமக்கள் நிரப்பி வைத்தால் போதுமானது. நிரப்பப்பட்ட படிவங்களை சேகரிக்க குறைந்தது 3 முறை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வருகை தருவார்கள்.

தற்போதுள்ள வாக்காளர்களுக்கு முன்கூட்டியே நிரப்பப்பட்ட கணக்கீட்டு படிவத்தைப் பதிவிறக்கம் செய்வதற்கும், நிரப்பப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்களை ஆன்லைன் முறையில் பதிவேற்றுவதற்கும் https: Voters.eci.gov.in, மற்றும் https:electors.eci.gov.in அல்லது ECINet mobie App மூலம் வசதி செய்யப்பட்டள்ளது. ஒவ்வொரு வாக்காளரும் இந்த படிவத்தை கணக்கெடுப்பு காலத்தில் வாக்காளர்கள் எந்தவொரு ஆவணத்தையும் தரவேண்டிய அவசியமில்லை. வாக்காளர் பதிவு அலுவலர்களால் தங்களது பெயர் முந்தைய சிறப்பு தீவிர திருத்த பட்டியலுடன் இணைக்கப்படாத காரணத்தினால் அறிவிப்பு வழங்கும் பட்சத்தில் மட்டுமே சுய சான்றளிக்கப்பட்ட கீழ் கண்ட ஆவணங்களுடன் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். வாக்காளர்களால், சுயச்சான்று அளித்து சமர்ப்பிக்க பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்கள்:

மத்திய அரசுமாநில அரசுபொதுத்துறை நிறுவனங்களின் வழக்கமான அடையாள அட்டை, ஊழியர் ஓய்வூதியம் பெறுபவருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு அடையாள அட்டைஓய்வூதிய ஆணை 01.07.1987-க்கு முன்னர் இந்தியாவில் அரசுஉள்ளூர் அதிகாரிகள்வங்கிகள்அஞ்சல் அலுவலகம் எல்.ஐ.சி பொதுத்துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட எந்தவொரு அடையாள அட்டை சான்றிதழ்ஆவணம், தகுதி வாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ், பாஸ்போர்ட், அங்கீகரிக்கப்பட்ட வாரியங்கள்பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட மெட்ரிகுலேஷன் கல்விச் சான்றிதழ்.

தகுதிவாய்ந்த மாநில அதிகாரியால் வழங்கப்பட்ட நிரந்தர வசிப்பிட சான்றிதழ், வன உரிமைச் சான்றிதழ், ஓ.பி.சி.எஸ்.சி.எஸ்.டி அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட்ட எந்தவொரு சாதிச் சான்றிதழ், தேசிய குடிமக்கள் பதிவேடு, மாநிலஉள்ளூர் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட குடும்பப் பதிவேடு, அரசாங்கத்தால் வழங்கப்படும் எந்தவொரு நிலம்வீடு ஒதுக்கீட்டுச் சான்றிதழ், ஆதார், வாக்குச்சாவடி நிலை அலுவலர் கணக்கெடுப்பு படிவங்களை வீடுதோறும் சென்று விநியோகம் செய்து முடித்த நிலையில், மீண்டும் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று வாக்காளர்களிடம் இருந்து பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவத்தின் நகலை சேகரிப்பர். வாக்குச்சாவடி நிலை அலுவலர் கணக்கீட்டு படிவத்தின் ஒரு நகலை அவருடன்அவளுடன் தேவையான ஆவணங்களுடன் வைத்திருப்பர். மேலும் விண்ணப்பதாரரால் தக்கவைக்கப்பட வேண்டிய கணக்கீட்டு படிவத்தின் மற்ற நகலில் படிவம் மற்றும் வண்ண புகைப்படம் கிடைத்ததற்கான ஒப்புதலை வழங்குவார்கள்.



**திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. முன்னாள் திருவேற்காடு நகர கழக செயலாளர் தெய்வத்திரு சூ .சத்யநாராயணன் 4-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் தெற்குமாவட்டஅ.தி.மு.க.மாணவரணிபொருளாளர்லயன்டாக்டர்ச.வெங்கடேசன்வீராபுரம் நற்கருணை ஆதரவற்றோர் இல்லத்தில் 150 நபர்களுக்கு உணவு வழங்கினார்.**

### பொங்கல் பண்டிகைதோறும்

# மகளிருக்கு ரூ.30 ஆயிரம் நிதி: தேஜஸ்வி யாதவ் வாக்குறுதி



**பாட்னா, நவ. 05-**

பொங்கல் பண்டிகைதோறும் மகளிருக்கு ரூ.30,000 நிதி உதவி வழங்கப்படும் என்று மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி யாதவ் தெரிவித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் நவ. 6, 11 என 2 கட்டங்களாக நடைபெற உள்ளது. முதல்கட்டத் தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலை 5 மணியுடன் முடிவடைகிறது. இந்நிலையில், தலைநகர் பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளரும் ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவருமான தேஜஸ்வி யாதவ், “பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் மகா கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி. நவ.14-ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. நவ. 18-ம் தேதி நாங்கள் பதவியேற்போம். இம்முறை பிஹாரில் இருந்து தேசிய ஜனநாயக கூட்டணி வேரோடு பிடுங்கி எறியப்படும்.

நாங்கள் ஏற்கெனவே பெண்களுக்காக அறிவித்த திட்டங்களை தாய்மார்களும் சகோதரிகளும் அதிக அளவில் வரவேற்றுள்ளனர். வரும் ஜனவரி 14-ம் தேதி மகர சங்கராந்தி பண்டிகை வர இருக்கிறது. இது மக்களுக்கு ஒரு புதிய ஆண்டு. பெண்களுக்காக நாங்கள் அறிவித்த திட்டத்தின் கீழ் மகர சங்கராந்தியின்போது பெண்களின் வங்கிக் கணக்குகளில் தலா ரூ.30,000 வரவு வைக்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் மகர சங்கராந்தியை முன்னிட்டு இந்த நிதியுதவி வழங்கப்படும். அந்த வகையில் இந்த திட்டத்தின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் நமது பெண்கள் ரூ.1.5 லட்சம் நிதி உதவி பெறுவார்கள். பணவீக்கம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நிதியுதவி அவர்களுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

பிஹாரை கட்டியெழுப்புவதே எங்கள் நோக்கம். இதைக் கருத்தில் கொண்டு விவசாயிகளை முன்னேற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுக்க இருக்கிறோம். எங்கள் அரசாங்கம் அமைந்த உடன், விவசாய பாசனத்துக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். நெல் மற்றும் கோதுமைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையுடன் கூடுதலாக முறையே ரூ.300 மற்றும் ரூ. 400 வழங்கப்படும். அரசு ஊழியர்கள், காவல்துறையினர், சுகாதாரப் பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் 70 கிலோ மீட்டர் சுற்றளவில் மட்டுமே பணியிட மாற்றம் செய்யப்படுவார்கள்.

பிஹார் முழுவதும் நாங்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறோம். முதல் கட்டத் தேர்தல் பிரச்சாரத்துக்கான கடைசி நாள் இது. மக்கள் மாற்றத்துக்கான மனநிலையில் இருக்கிறார்கள். இந்த முறை பிஹாரில் 20 ஆண்டுகளாக இருக்கும் ஆட்சியை மக்கள் அகற்றுவார்கள்.” என தெரிவித்தார்.

### கோவை மாணவி வன்கொடுமை:

# 3 பேர் சுட்டுப்பிடிப்பு

**கோவை, நவ. 05-**

கோவை மாணவி வன்கொடுமை குறித்து 3 பேர் கொண்ட கும்பலை போலீசார் சுட்டுப்பிடித்தனர்.

தென்னகத்தின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை மாநகரில், வேலை மற்றும் கல்விக்காக பலர் தங்களது சொந்த ஊர்களை விட்டு அங்கு வசிக்கிறார்கள். இவர்களில் இளம் பெண்களும் தனியாக விடுதிகளில் தங்கியுள்ளனர். இதேபோல் மதுரையை சேர்ந்த 21 வயது மாணவி, கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் முதுகலை பட்டப்படிப்பில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இதற்காக அவர் தனியார் விடுதியில் தங்கி இருந்து கல்லூரிக்கு சென்று வருகிறார். அந்த மாணவிக்கும் சமூக வலைதளத்தில் கோவையில் ஆட்டோமொபைல்ஸ் கடை நடத்தி வரும் 25 வயதான வாலிபருடன் பழக்கம் ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் 2 பேரும் செல்போனில் பேசி வந்தனர். இது நாளடைவில் காதலாக மாறியது.

2 பேரும் நேரில் அடிக்கடி சந்தித்துக்கொண்டதுடன் விடுமுறை நாட்களில் வெளியே சென்று வந்தனர். கடந்த 3 தினங்களுக்கு முன்பு விடுமுறை என்பதால், அந்த மாணவி தான் தங்கி இருக்கும் விடுதியில் இருந்து வெளியே வந்தார். காதலர்கள் காரில் பல இடங்களுக்கு வெளியே சென்றனர். இரவில் கோவை விமான நிலையம் பின்புறம் ஆள்நடமாட்டம் இல்லாத பகுதியில் காரில் அமர்ந்தபடி பேசிக்கொண்டு இருந்தனர்.

அவர்கள் 2 பேரும் காதல் மயக்கத்தில் தன்னிலை மறந்து மகிழ்ச்சியாக இருந்ததாக கூறப்படுகிறது. அப்போது மொபட்டில் அந்த வழியாக வந்த 3 பேர், கார் தனியாக நிற்பதை பார்த்து அருகில் சென்றனர். காரில் உள்ளே காதலர்கள் இருப்பதை அறிந்த அவர்கள் காரின் கதவை தட்டி திறக்கும்படி கூறி மிரட்டினர். இதனால் காரில் இருந்த காதல் ஜோடி அதிர்ச்சியடைந்தனர். ஆனால் பயத்தில் அவர்கள் கதவை திறக்கவில்லை.

இதையடுத்து அந்த 3 பேரும் அரிவாளால் காரின் கண்ணாடியை உடைத்தனர். காதலனுடன் இருந்த கல்லூரி மாணவியை வெளியே இழுத்தனர். அவரை விடாமல் காதலன் பிடித்துக்கொண்டு சத்தம் போட்டார் இதனால் ஆத்திரமடைந்த அந்த கும்பல் காதலனின் தலையில் அரிவாளால் வெட்டினர். இதில் படுகாயம் அடைந்த அவர் மயங்கி விழுந்தார். உடனே 3 பேரும் சேர்ந்து மாணவியை வலுக்கட்டாயமாக அங்கிருந்த மறைவான பகுதிக்கு கடத்தி சென்றனர். அவர்களிடம் இருந்து மாணவி தப்பிக்க போராடியபோது கடுமையாக தாக்கி உள்ளனர். இதில் மயங்கிய மாணவியை ஒருவர் பின் ஒருவராக என கூட்டு பலாத்காரம் செய்து விட்டு தப்பிச்சென்றனர்.

அதிகாலை 2 மணியளவில் மயக்கம் தெளிந்த காதலன், தனது காதலியை தேடினார். ஆனால் அவரை காணவில்லை. உடனே கோவை மாநகர போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். அவர்கள் பீளமேடு போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அங்கு தலையில் காயத்துடன் இருந்த காதலனை மீட்டு சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் அந்த பகுதியில் அனாதையாக கிடந்த மொபட்டை கைப்பற்றினர். அது திருட்டு மொபட் என தெரியவந்தது.

பிறகு கல்லூரி மாணவியை போலீசார் தேடினர். இரவு நேரம் என்பதாலும், அந்த பகுதி தெருவிளக்கு வசதி இல்லாத பகுதி என்பதாலும் மாணவியை உடனடியாக கண்டுபிடிக்க முடியவில்லை. சுமார் 1 மணி நேர தேடுதல் வேட்டைக்கு பின்னர் புதர் மறைவில் கல்லூரி மாணவி நிர்வாண கோலத்தில் கிடந்ததை கண்டுபிடித்தனர். அவரின் உடலில் காயங்களும் இருந்தன. போலீசார் அந்த மாணவியை மீட்டு, சிகிச்சைக்காக கோவையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து பீளமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து 3 பேர் கும்பலை தேடிவந்தனர். மேலும் சம்பவம் நடந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை வைத்து தனிப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். மேலும் சந்தேகத்தின் பேரில் சிலரை பிடித்து விசாரணை மேற்கொண்டனர். இந்த நிலையில் மாணவியை பலாத்காரம் செய்த 3 பேரையும் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி அளவில் தனிப்படை போலீசார் அதிரடியாக சுட்டுப் பிடித்தனர். முன்னதாக துடியலூர் அருகே வெள்ளக்கிணறு பகுதியில் 3 பேரும் பதுங்கி இருப்பதாக காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அங்கு சென்ற பீளமேடு காவல் நிலைய ஆய்வாளர் அர்ஜுன், சரவணம்பட்டி காவல் நிலைய தலைமை காவலர் சந்திரசேகர் தலைமையிலான காவல்துறையினர் அவர்களை சுற்றி வளைத்தனர்.

பின்னர் தப்ப முயன்ற மூவரை பிடிக்க முயன்றபோது தலைமை காவலர் சந்திரசேகரை அந்த கும்பல் இடது கையில் வெட்டியுள்ளனர். தற்காப்புக்காக துப்பாக்கியால் சுட தொடங்கிய போலீசார், 2 பேரை இரண்டு கால்களிலும் ஒருவரை ஒரு காலிலும் சுட்டுப் பிடித்தனர். பிடிபட்ட 3 பேருக்கும் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. காயமடைந்த தலைமை காவலர் சந்திரசேகருக்கும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பிடிபட்ட தவசி, சதீஷ், கார்த்திக் ஆகிய மூவரும் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் மீது கொலை உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்குகள் இருப்பதாகவும் போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற கோவை துடியலூர் அடுத்த வெள்ளக்கிணறு அருகே தடயவியல் நிபுணர் குழு சோதனை நடத்தியது.

### சென்னையில்

# அமலாக்கத்துறை சோதனை

**சென்னை, நவ. 05-**

சென்னையில் 5 இடங்களில் அமலாக்கத்துறை நேற்று சோதனை நடத்தினர்.

நாடு முழுவதும் சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தொடர்பான வழக்குகளை அமலாக்கத்துறை விசாரித்து வருகிறது. இதுதொடர்பாக அவ்வபோது சோதனைகளும் நடைபெற்றன. இந்நிலையில், சென்னையில் 5 இடங்களில் அமலாக்கத்துறை நேற்று சோதனை நடத்தினர். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்துவரும் தொழிலதிபரின் வீடு உள்ளிட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் காலை முதல் சோதனை நடத்தினர்.

சென்னையில் அமைந்தகரை, சூளைமேடு, நெற்குன்றம் உள்பட 5 இடங்களில் சட்டவிரோத பணப்பரிவர்த்தை புகார் தொடர்பாக அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

### இரட்டை இலை சின்ன விவகாரம்:

# தேர்தல் ஆணையத்திற்கு செங்கோட்டையன் கடிதம்

**ஈரோடு, நவ. 05-**

இரட்டை இலை குறித்து தேர்தல் ஆணையத்திற்கு செங்கோட்டையன் கடிதம் எழுதியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் தொகுதி எம்.எல்.ஏ.வான செங்கோட்டையனை சமீபத்தில் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கி, அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். கட்சி விதிகளுக்கு எதிராக செயல்பட்டதால் அவர் நீக்கப்பட்டதாக எடப்பாடி பழனிசாமி தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், இரட்டை இலை சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு செங்கோட்டையன் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில், "தேர்தல் ஆணையத்திடம் நிலுவையில் உள்ள இரட்டை இலை சின்ன விவகாரத்தில் தலையிட்டு விசாரணை நடத்த வேண்டும். எடப்பாடி பழனிசாமி தலைமை தாங்குவதாக கூறும் அ.தி.மு.க.வின் பிரிவு, உண்மையான அ.தி.மு.க. அல்ல. அ.தி.மு.க. கட்சியின் உண்மை நிலை என்னவென்பதை நிரூபிக்க அவகாசம் தேவை." என்று செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

# சபரிமலையில் 16-ம் தேதி நடை திறப்பு

**திருவனந்தபுரம், நவ. 05-**

சபரிமலையில் வருகிற 16-ந்தேதி நடை திறக்கப்படுகிறது.

சபரிமலை அய்யப்பன் கோவிலில் நடப்பு மண்டல-மகர விளக்கு சீசன் முதல் அடுத்த ஆண்டு (2026) மண்டல சீசன் வரை சிறப்பு பூஜை, வழிபாடுகள் நடைபெறும் தேதி குறித்த விவரங்களை திருவிதாங்கூர் தேவஸ்தானம் வெளியிட்டு உள்ளது. அதன் விவரம் வருமாறு:-

நடப்பு மண்டல பூஜைக்காக சபரிமலை அய்யப்பன் கோவிலில் நடை வருகிற 16-ந்தேதி மாலை 5 மணிக்கு திறக்கப்படுகிறது. அன்றைய தினம் சபரிமலை மற்றும் மாளிகப்புறம் கோவில்களுக்கான புதிய மேல்சாந்திகள், தந்திரி முன்னிலையில் மூல மந்திரம் சொல்லி பதவி ஏற்பார்கள். மறுநாள் 17-ந்தேதி முதல் புதிய மேல்சாந்திகள் நடையை திறந்து பூஜைகள் மற்றும் வழிபாடுகளை நிறைவேற்றுவார்கள்.

நடப்பாண்டின் மண்டல பூஜை அடுத்த மாதம் (டிசம்பர்) 27-ந்தேதி நடக்கிறது. அன்று இரவு நடை சாத்தப்பட்டு மீண்டும் மகரவிளக்கு பூஜைக்காக 30-ந்தேதி நடை திறக்கப்படும். நடப்பு சீசனின் மகரவிளக்கு பூஜை அடுத்த ஆண்டு (2026) ஜனவரி மாதம் 14-ந்தேதி நடைபெறும். தொடர்ந்து 20-ந்தேதி பந்தளம் ராஜ குடும்ப பிரதிநிதியின் சிறப்பு தரிசனத்திற்கு பின் கோவில் நடை அடைக்கப்படும். பின்னர் மாசி மாத பூஜைக்காக சபரிமலை கோவில் நடை பிப்ரவரி மாதம் 12-ந் தேதி திறக்கப்பட்டு 17-ந்தேதி அடைக்கப்படும். பங்குனி மாத பூஜைக்காக மார்ச் மாதம் 14-ந் தேதி திறக்கப்பட்டு 19-ந்தேதி அடைக்கப்படும். இவ்வாறு தேவஸ்தானம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### கரூர் கூட்ட நெரிசல் வழக்கு:

# சி.பி.ஐ. விசாரணைக்கு 12 பேர் ஆஜர்

**கரூர், நவ. 05-**

கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு 12 பேர் நேரில் ஆஜராகினர்.

கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பான சி.பி.ஐ. விசாரணை தீவிரமடைந்து உள்ளது. ஏற்கனவே கூட்ட நெரிசல் சம்பவம் நடைபெற்ற கரூர் வேலுச்சாமிபுரத்தில் சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்த 31 மற்றும் 1-ந் தேதிகளில் நவீன ஸ்கேனர் கருவியுடன் ஆய்வு மேற்கொண்டனர். இதையடுத்து சம்பவ இடத்தில் உள்ள கடைகள், நிறுவனங்களின் உரிமையாளர்கள், அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்களிடம் விசாரணை நடத்துவதற்காக சம்மன் அனுப்பப்பட்டு உள்ளது. அந்த சம்மனின் அடிப்படையில் நேற்று முன்தினம் 13 பேர் விசாரணைக்கு ஆஜராகினர்.

நேற்று முன்தினம் காலை நகை அடகுக்கடை, பேக்கரி, மருந்து கடை, ஓட்டல் உரிமையாளர்கள் உள்பட மொத்தம் 12 பேர் சி.பி.ஐ. சார்பில் அனுப்பப்பட்டிருந்த சம்மனின் அடிப்படையில் விசாரணைக்கு ஆஜராகினர். அவர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். அப்போது சம்பவம் நடைபெற்றபோது கடை திறக்கப்பட்டிருந்ததா?, சம்பவத்தின் போது கடையில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகள் குறித்தும் கேட்கப்பட்டதாக தெரிகிறது. காலை 9 மணியளவில் தொடங்கிய விசாரணை மாலை வரை நடந்தது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சத்தீஸ்கரில் சரக்கு ரயில்மீது பயணிகள் ரயில் மோதல்

### 6 பேர் பலி - மீட்புப்பணி தீவிரம்



**ராய்ப்பூர், நவ. 05-**

சத்தீஸ்கர் மாநிலத்தில் சரக்கு ரயில் மீது பயணிகள் ரயில் மோதிய விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் வந்து கொண்டிருந்த பயணிகள் ரயில் முன்னால் நின்று கொண்டிருந்த சரக்கு ரயில்மீது வேகமாக மோதியது. இதில் பயணிகள் ரயில் சரக்கு ரயிலின் பெட்டிகள் மீது ஏறி நின்றது. இந்த இரண்டு ரயில்களும் மோதிய கோர விபத்தில் பயணிகள் நிலைகுலைந்தனர். இந்த கோர விபத்தில் இதுவரை 6 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.



**தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிய விழாவில், மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு அடையாள அட்டைகளை அட்டை வழங்கினார்.**

# தி.மு.க.வில் இணைந்தது ஏன்..? மனோஜ் பாண்டியன் விளக்கம்

**சென்னை, நவ. 05-**

தி.மு.க.வில் இணைந்தது குறித்து மனோஜ் பாண்டியன் விளக்கம் அளித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தொகுதி எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன். அதி.மு.க. வேட்பாளராக போட்டியிட்ட வெற்றி பெற்ற இவர் ஓ.பன்னீர் செல்வத்தின் ஆதரவாக இருந்து வந்தார். இந்நிலையில், மனோஜ் பாண்டியன் நேற்று தி.மு.க.வில் இணைந்தார். அண்ணா அறிவாலயம் சென்ற மனோஜ் பாண்டியன் தி.மு.க. தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்.

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், “வேறொரு இயக்கத்தை நம்பி, அந்த இயக்கத்தின் சொல்படிதான் நடக்கின்ற துர்பாக்கியமான காலம்தான் தற்போது அதி.மு.க.வில் இருக்கிறது. உழைப்பை அங்கீகரித்து அங்கீகாரம் தராத, உழைப்பு வேண்டாம் என்று ஒவ்வொரு தொண்டரையும் விரட்டக்கூடிய எடப்பாடி பழனிசாமியுடைய நோக்கம் என்ன, அவருடைய சிந்தனை என்ன..?. பாஜகவின் கிளைக்கழகமாக அதி.மு.க. உள்ளது. எந்த கொள்கைக்காக அதி.மு.க. உருவானதோ அது காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது.

கொள்கையைப் பின்பறக்கூடிய திராவிடக் கட்சியுடன் நான் இணைந்துள்ளேன். நேற்று திராவிடக் கொள்கையை பாதுகாக்கின்ற தலைவராக, போராட்டக் கொள்கையை எங்கும் அடகு வைக்காத ஒரு தலைவராக, எவ்வளவு சோதனை வந்தாலும் முயற்சிகளைச் சிறப்பாக செய்யக்கூடிய தலைவராகவும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுவதால், தற்போது தி.மு.க.வில் இணைந்துள்ளேன். நேற்று மாலை 4 மணிக்கு எனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ய உள்ளேன் என்று மனோஜ் பாண்டியன் தெரிவித்தார்.

### 160-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று

# பீகாரில் தே.ஜ.கூ. ஆட்சி அமைக்கும்: அமித்ஷா

**பாட்னா, நவ. 05-**

பீகார் தேர்தலில் 160-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று தே.ஜ.கூ ஆட்சி அமைக்கும் என்று அமித்ஷா தெரிவித்துள்ளார்.

பீகாரில் முதல்வர் நிதிஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம்-பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் உள்ளது. பீகாரில் 243 தொகுதிகளுக்கு இரு கட்டங்களாக நவம்பர் 6ல் முதல் கட்டமாக 121 தொகுதிகளுக்கும், 11-ம் தேதி மீதமுள்ள தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்படுகிறது.

முதல் கட்ட தேர்தலுக்கான தேர்தல் பிரசாரம் நேற்றுடன் நிறைவடையும் நிலையில், அரசியல் கட்சித் தலைவர் அனல்பறக்கும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், நேற்று தர்பங்கா, மோதிஹாரியில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் அமித் ஷா பேசியதாவது:-

பீகாரை பேரழிவிற்கு உட்படுத்திய காட்டாட்சியைத் தடுக்க தாமரை சின்னம் இருக்கும் பொத்தானை மக்கள் அனைவரும் அழுத்த வேண்டும். தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் கோஷி நதி நீலை நீர்ப்பாசனத்திற்காகவும், வெள்ளத்தைத் தடுக்கவும் அரசு ரூ. 26 ஆயிரம் கோடி செலவிடப்படும்.

நவம்பர் 6-ம் தேதி வாக்குப்பதிவு நாளில் நீங்கள் தவறு செய்தால் பீகாரில் கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள், மிரட்டி பணம் பறித்தல் ஆகியவை மீண்டும் வழக்கமாகிவிடும். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி பீகாரை முழுமையான வளர்ச்சிக்கு கொண்டுசெல்லும். பீகாரில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டால், மிதிலா, கோஷி, திருஹட்டைச் சேர்ந்த மக்கள் சிகிச்சைக்காக பாட்னா அல்லது டெல்லிக்குச் செல்ல வேண்டிய அவசியமிருக்காது. ஏனெனில் எய்ம்ஸ்-தர்பங்காவில் தரமான மருத்துவ வசதிகளைப் பெறுவார்கள்.

காட்டாட்சி ராஜ்ஜியத்தை துடைத்தெறிய தேஜ கூட்டணிக்கு மக்கள் அனைவரும் ஓட்டளிக்க வேண்டும். ஆர்ஜேடியின் காட்டாட்சி ராஜ்யத்தை மீண்டும் மாறுவேடத்தில் கொண்டு வர முயற்சி நடக்கிறது. பீகாரில் தேஜகூ 160-க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

### என்னை கொலை செய்ய முயற்சி:

# பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் பரபரப்பு புகார்

**சேலம், நவ. 05-**

அன்புமணியின் ஆதரவாளர்களே இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாக பரபரப்பு குற்றச்சாட்டை பா.ம.க. எம்.எல்.ஏ., அருள் முன்வைத்துள்ளார்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் அடுகே வடுகம்பட்டி பகுதியில் பா.ம.க. எம்.எல்.ஏ., அருள் சென்ற கார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சுமார் 50க்கும் மேற்பட்ட கும்பல், இந்த தாக்குதலில் ஈடுபட்டது. பா.ம.க.வில் அன்புமணிக்கும், ராமதாசுக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வரும் நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் அரங்கேறியுள்ளது. அருளின் கார் தாக்கப்பட்டு, கண்ணாடி உடைக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசி இருப்பதாவது; துக்க வீட்டில் கலந்துகொண்டு திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது சோளக்காட்டிற்குள் மறைந்திருந்தவர்கள் காரை நிறுத்தி எங்கள் மீது திடீரென தாக்குதல் நடத்தினர்.

என்னை கொலை செய்யும் நோக்கில் திட்டமிட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் தாக்குதல் நடத்தியதில் 6 கார்கள் சேதமடைந்தது. அன்புமணியின் ஆதரவாளர்களே இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு அவர் கூறினார். பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் கார் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மணிப்பூரில 4 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

**இம்பால், நவ. 05-**

மணிப்பூரில் 4 பயங்கரவாதிகள் சட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

மணிப்பூரில் மெய்தி மற்றும் குகி இனக்குழுக்களுக்கு இடையே 2023 முதல் நடந்து மோதல் நடைபெற்று வருகிறது. இதில் 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, இந்த இனக்குழுக்களை சேர்ந்த ஆயுதக்குழுவினரை மத்திய அரசு பயங்கரவாத இயக்கங்களாக அறிவித்துள்ளது. மேலும், இந்த பயங்கரவாத இயக்கங்களை ஒழிக்க பாதுகாப்புப்படையினர் மணிப்பூரில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அம்மாநிலத்தின் கம்ஜொங் மாவட்டம் ஹனிப் கிராமத்தில் உள்ள வனப்பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை அப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர்.

இந்த துப்பாக்கி சூட்டிற்கு பாதுகாப்புப்படையினரும் பதிலடி தாக்குதல் நடத்தினர். இதில், பாதுகாப்புப்படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 4 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். எஞ்சிய பயங்கரவாதிகள் வனப்பகுதிக்குள் தப்பிச்சென்றுவிட்டனர்.

இதையடுத்து என்கவுன்டர் நடந்த பகுதியில் பாதுகாப்புப்படையினர் குவிக்கப்பட்டு தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



கோவை வன்கொடுமை சம்பவம், சட்டங்கள் கடுமையாக இல்லை என்பதை உணர்த்துகிறது. கடும் சட்டங்கள் இருந்தால் மட்டுமே இது போன்ற குற்றங்கள் நடக்காது. இதே போல் தான் பொள்ளாச்சியில் நடந்தது. அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்தது. ஆனால் நடவடிக்கை ஒன்றும் இல்லை.

**- சீமான்**



சி.பி.எஸ்.இ வெளியிட்டுள்ள தேர்வு அட்டவணை இரண்டாம் பாடமாக இந்தியை தேர்ந்தெடுத்த மாணவர்களுக்கு சாதகமாகவும், தமிழ் உள்ளிட்ட மொழிகளை தேர்வு செய்த மாணவர்களுக்கு பாதகமாகவும் அமைந்திருக்கிறது. சி.பி.எஸ்.இ 10-ம் வகுப்புத் தேர்வு அட்டவணையை மாற்ற வேண்டும்.

**- அன்புமணி**



பாலியல் வன்கொடுமை குற்றங்கள் தொடராமல் இருக்க காவல்துறையின் தொடர் கண்காணிப்பும், சட்டங்கள் மூலம் கடுமையான தண்டனைகளும் இருந்தால் மட்டுமே பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க முடியும். தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்து பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

**- ஜி.கே.வாசன்**



கோவையில் அடையாளம் தெரியாத கும்பலால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவி மற்றும் அவரது நண்பருக்கு உரிய சிகிச்சை வழங்குவதோடு, இத்தகைய கொடூரச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்குக் கடும் தண்டனையை அரசு பெற்றுத் தர வேண்டும்.

**- டி.டி.வி.தினகரன்**

# திருவொற்றியூர் காலடிப்பேட்டையில் அதிமுக பாக முகவர்கள் கூட்டம்



**திருவொற்றியூர் நவ. 05**

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அதிமுக திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர்அ ஜாக்ஸ் பரமசிவம் தலைமையில் 14வது மேற்கு வட்ட அதிமுக வட்ட கழக செயலாளர் டி.மணிமாறன் ஏற்பாட்டில் பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்தாய்வு நடைபெற்றது.

**கூட்டம்**

இந்த வகையில் அதிமுக வில் பூத்வாரியாக 9 பேர் கொண்ட பூத்கமிட்டி நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. திருவொற்றியூர் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட 14வது கிழக்குவட்டத்திற்கு திருவொற்றியூர் காலடிப்பேட்டை புதுத்தெருவில் அமைந்துள்ள மீனாட்சி திருமண மண்டபத்தில் 10 பூத்துகளுக்கான பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கலந்தாய்வு கூட்டத்தில் பூத் கமிட்டிபொறுப்பாளர்கள் புவன் வடிவேல்தன சேகரன், நவாஸ் அக்பர்ஆகியோர் கலந்துகொண்டு பூத் வாரியாக தனித்தனி வாட்ஸ் அப் குழுவை உருவாக்கினார்கள்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் ம.சுந்தர் ஜமுனாராணி, அருள் மணி குமரன் கார்த்திக், வசந்த் ஆகியோருடன் அதிமுக வட்ட செயலாளர்கள் ஏ.எஸ். மா.அரசு டி.எஸ்.பிரகாஷ், ரீகன், சாகுல் ஹமீது சுரேஷ்குமார் மற்றும்தேசிங்கு பேனர் கார்த்திக்டன் 14வது மேற்கு வட்டத்தைச் சார்ந்த அதிமுக பூத் கமிட்டி நிர்வாகிகள் மாவட்டம் பகுதி வட்ட அதிமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



**சென்னை மாதவரம் காமராஜர் சாலை 27வது வட்டத்தில் உள்ளபால்பண்ணை ஏரியை ஆய்வுமேற்கொண்டு மாநகராட்சி நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைபெற்றுவரும் மேம்பாட்டுபணிகளை மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம் எல் ஏ தலைமையில் மேயர் பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவிதேஜா மண்டல குழு தலைவர் நந்தகோபால் மாமன்ற உறுப்பினர் சந்திரன் உடன் இருந்தனர்.**



**திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம் அயனம்பாக்கம் பகுதியை சேர்ந்த தமீம்அன்சாரி (எ) தமிழரசு-வசந்தா தம்பதியினரின் 2 குழந்தைகள் ரியாஸ் (5) மற்றும் ரிஸ்வான்(3) ஆகியோர் நீரில் மூழ்கி உயிரிழந்ததால் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 லட்சம் வீதம் மொத்தம் ரூ,6 லட்சம் மதிப்பிலான நிதி உதவிக்கான காசோலைகளை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் முன்னிலையில் ஆறுதல் கூறி வழங்கினார்.**

# ஒரே நேரத்தில் 84 மாணவர்கள் பயிற்சி பெறும் வகையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய கொளத்தூர் பெரியார் நகரில் முதல்வர் படைப்பக கட்டிட பணி: அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு



**சென்னை,நவ.05**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, பெரியார் நகர் நூலகத்தை புதுப்பித்து கட்டப்பட்டு வரும் 'முதல்வர் படைப்பகம்' கட்டிடத்தின் இறுதிக்கட்ட பணிகள், அகரம், ஜெகநாதன் தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் கொளத்தூர் மறுவாழ்வு மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம் கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் புதிய நவீன சந்தை மற்றும் கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் "மக்கள் சேவை மையத்தின்( முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது : நடப்பு நிதியாண்டில் மானியக் கோரிக்கையின் போது, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கொளத்தூரில் அகரம் பகுதியில் அமைந்துள்ள கொளத்தூர் முதல்வர் படைப்பகம் போன்று சென்னையின் வட சென்னையில் 2, இதர பகுதிகளில் 13 என 15 இடங்களில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். அதன்படி கொளத்தூரில் பெரியார் நகர் பகுதியில் செயல்பட்டு வந்த பழமையான நூலக கட்டிடம் இடிக்கப்பட்டு, ரூபாய் 6.50 கோடி மதிப்பீட்டில் நூலகம் புனரமைப்பு மற்றும் போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கான பயிற்சியகம், கட்டணமில்லா இணைய வசதி, குளிரூட்டப்பட்ட பயிற்சி கூடம், கணினி அறை கொண்ட பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தின் இறுதி கட்டப் பணிகளை இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கொளத்தூர் ஜெகநாதன் நகரில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் 4 தளங்களில் நவீன வசதிகளுடன் அமையவுள்ள இலவச டயாலிசிஸ் சிகிச்சை பிரிவு, செயற்கை உறுப்பு பொறுத்தும் சிகிச்சை பிரிவு. இயன்முறை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட ஒருங்கிணைந்த மருத்துவ மையம், கொளத்தூர் பேப்பர் மில் சாலையில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மூன்று தளங்களில் கட்டப்பட்டு வரும் நவீன சந்தை கட்டுமான பணியை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலை, விநாயகபுரம் பகுதியில் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் 4 தளத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் மக்கள் சேவை மையத்தின் முன்னேற்றப் பணிகளை இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாதம் 20 ஆம் தேதிக்குள் பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க உள்ளார், நூலகத்துடன் கூடிய, போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி பள்ளியும் அமைக்கப் பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 84 மாணவர்கள் பயிற்சி பெறும் வகையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய வகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. அதிக பணம் செலுத்தி போட்டி தேர்வுக்கான பயிற்சி மையங்களில் பயில முடியாத மாணவர்களுக்கு இந்த பயிற்சி மையம் மிகுந்த உதவியாக இருக்கும்.

மேலும் கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டு அவதிப்படுவதற்காக பிரத்தியேக டயாலிசிஸ் சிகிச்சை வழங்குவதற்கான இலவச சிகிச்சை மையம் மற்றும் எதிர்பாரா விதமாக கை கால்கள் இழந்தவர்களுக்கு செயற்கை கை மற்றும் கால் பொருத்தக்கூடிய சிகிச்சை மையம், இயன் முறை சிகிச்சை பிரிவு உள்ளிட்ட வசதிகள் கொண்ட மருத்துவ மையம் வரும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.சென்னை வசதியற்ற, நடுத்தர மக்களுக்காக பல திட்டங்களை முதலமைச்சர் மேற்கொண்டு வருகிறார். கொளத்தூர் தொகுதியை ஒட்டுமொத்தமாக தன்னிறைவு பெறும் தொகுதியாக மாற்ற வேண்டும் என்ற நடவடிக்கையை முதலமைச்சர் மேற்கொண்டு வருகிறார், அதன் ஒரு பகுதியாகத்தான் இதுபோன்ற பணிகள் நடைபெற்று வருகிறது என்றார்.

இந்த ஆய்வின் போது சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர்.அ.சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர்எச்.ஆர்.கௌஷிக், கொளத்தூர் காவல் துணை ஆணையர். பி.குமார், அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் (சென்னை) முதல்வர் டாக்டர் டி.எஸ்.சரவணன், மண்டலக் குழுத்தலைவர்சரிதா மகேஷ்குமார், உதவி பதிவுத்துறை தலைவர் (சென்னை வடக்கு) ரூபியா பேகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள்மு.இந்துமதி, டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், உள்ளாட்சிப் பிரதிநிதிகள்ஐசி எப்.முரளிதரன், திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், .தாவூத்பீ, .அமுதா, .யோகப்பிரியா,ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# கோலாலம்பூரில் இருந்து சென்னைக்கு விமானத்தில் கடத்தி வந்த ரூ.2.80 கோடி தங்கம் பறிமுதல்

**சென்னை நவ 05-**

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து ஏர் ஏசியா பயணிகள் விமானம் நேற்று முன்தினம் அதிகாலை சென்னை விமான நிலையத்திற்கு வந்தது. இதில் வந்த பயணிகளை சுங்கத்துறை ஏர் இன்டெலிஜென்ட் அதிகாரிகள் கண்காணித்தனர். அப்போது தமிழ்நாட்டை சேர்ந்த மூன்று பெண்கள் உள்பட 5 பேர் ஒரு குழுவாக மலேசியா சுற்றுலா பயணிகளாக சென்று விட்டு திரும்பி வந்தனர். அவர்கள் மீது சுங்க அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. மூன்று பெண்களையும், தனி அறைக்கு அழைத்துச் சென்று சோதனை நடத்தினர். ஒரு பெண்ணின் உள்ளாடைக்குள் 5 தங்க கட்டிகள் மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர்.

அந்த 5 தங்க கட்டிகளும் 24 கேரட் சுத்தமான தங்கம் ஆகும். அவைகளின் மொத்த எடை 2.5 கிலோ. அதன் சர்வதேச மதிப்பு ரூ.2.80 கோடி. இதையடுத்து மூன்று பெண்கள் உள்பட ஐந்து பேரையும் சுங்க அதிகாரிகள் கைது செய்து மேலும் விசாரித்தனர். இவர்களில் 2 பெண்கள், 2 ஆண்கள் ஆகிய 4 பேர் தங்கம் கடத்தும் கடத்தல் குருவிகள். இவர்கள் பலமுறை இதே போல், வெளிநாடுகளில் இருந்து தங்கம் கடத்திக் கொண்டு வந்து, சுங்க அதிகாரிகளிடம் சிக்கி பிரபலமான முகங்கள். இதனால், தாங்கள் மட்டும் தங்கத்தை கடத்திக் கொண்டு வந்தால், சுங்க அதிகாரிகள் சுலபமாக அடையாளம் கண்டுபிடித்து, தங்கத்தை கைப்பற்றி விடுவார்கள் என்பதால் புது முகமாக தஞ்சாவூரைச் சேர்ந்த மற்றொரு இளம்பெண்ணை முதன்முறையாக கடத்தல் குருவியாக மலேசியா நாட்டிற்கு அழைத்து சென்றுள்ளது விசாரணையில் தெரிய வந்தது.



**வளசரவாக்கம் மண்டலம் 154 வது வார்டு ராமாபுரம் வெங்கடேஸ்வரா நகர் 13வது குறுக்கு தெருவில் குடிநீர் குழாயில் ஏற்பட்ட விரிசல் காரணமாக சாக்கடை நீர் கலப்பதால் பொதுமக்கள் புகாரின் பேரில் மாமன்ற உறுப்பினர்கள் ராமாபுரம்வ.செல்வகுமார்,கே.ராஜூ ஆகியோர் ஆய்வு செய்தனர்.**

# ஜவுளி கடை ஷோ கேஷில் பொம்மைக்கு அணிவிக்கப்பட்ட புதுத்துணிகள் மீது கை துடைப்பு: ஓட்டல் ஊழியர்களுடன் கடும் மோதல்

**சென்னை நவ 05-**

சென்னை அண்ணாநகர் 2வது அவென்யூவில் துணிக் கடை உள்ளது. இங்கு முகமது இலாகி என்பவர் வேலை பார்த்து வருகிறார். ஜவுளி கடை அருகே அசைவ உணவகம் உள்ளது. இங்கு சாப்பிட்டுவரும் நபர்கள், ஆடை அலங்கார பொம்மை மற்றும் துணிகளில் கைகளை துடைத்துள்ளனர். இதன்காரணமாக இரண்டு கடைக்காரர்களுக்கும் பிரச்னை இருந்துள்ளது.

இந்த நிலையில், நேற்றிரவு துணிக்கடை ஊழியர்கள், ஓட்டல் ஊழியர்கள் இடையே பயங்கரமோதல் ஏற்பட்டு ஆபாசமாக பேசியதுடன் சரமாரியாக தாக்கியுள்ளனர்.

அப்போது இரண்டு தரப்பினரும் மாறி, மாறி நடுரோட்டில் விரட்டிச் சென்று தாக்கிக் கொண்டதில் துணிக் கடை ஊழியர்களுக்கு மண்டை உடைந்து ரத்தம் கொட்டியுள்ளது. இதுசம்பந்தமாக இரண்டு தரப்பினரும் சி.சி.டி.வி ஆதாரங்களுடன் திருமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.இதன்படி போலீசார் வழக்குபதிவு செய்து நடத்திய விசாரணையில் ஓட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்கள் கடையின் முன்பு உள்ள பொம்மைகளை தள்ளிவிடுவதுடன் புதிய ஆடைகளில் கைகளை துடைப்பதும் தெரியவந்துள்ளதாக தெரிகிறது.

இதுபற்றி போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே காயம் அடைந்த துணிக்கடை ஊழியர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

# மாநகர பேருந்தின் ஓட்டுநரை தாக்கி பேருந்து கண்ணாடிகள் உடைப்பு: ஒருவர் கைது

**சென்னை நவ 05-**

சென்னை மாநகர அரசு பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வரும் சுயாட்சி, என்பவர் கடந்த 01. ந் தேதி அன்று தடம் எண் 121 எச் பேருந்தின் ஓட்டுநராக பணியிலிருந்த போது, இரவு கோயம்பேட்டிலிருந்து மீஞ்சூர் நோக்கி செல்லும் வழியில், மாதவரம், 200 அடி சாலை மற்றும் 100 குடோன் சந்திப்பு அருகே செல்லும்போது, திடீரென 2 பேர் பேருந்தை வழிமறித்து, ஓட்டுநர் சுயாட்சியை தகாத வார்த்தைகளால் பேசி, பேருந்தின் கண்ணாடிகளை கட்டை மற்றும் கையால் அடித்து சேதப்படுத்தினர். மேலும் இ,ருவரும் பேருந்தில் ஏறி ஓட்டுநர் சுயாட்சியை கையால் தாக்கி தடுக்க சென்ற நடத்துனரின் கையிலிருந்த பணப்பையை பிடுங்க முயன்றபோது, பொதுமக்கள் சத்தம் போடவே இருவரும் கொலை மிரட்டல் விடுத்து பேருந்திலிருந்து இறங்கி தப்பிச் சென்றனர்.

இரத்தக்காயமடைந்த ஓட்டுநர் சுயாட்சி பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து மாதவரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

மாதவரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி அஜீத்குமார், என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி அஜீத் குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

# பெண் மருத்துவர் கொலை வழக்கில் தலைமறைவாக இருந்த கார் ஓட்டுநர் கைது

**சென்னை நவ 05-**

சென்னை முகப்பேரில் ஓய்வுபெற்ற அரசு பெண் மருத்துவர் கொலை வழக்கில் 8 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார். மருத்துவர் மல்லிகா கொலை வழக்கில் திருப்பூரில் பதுங்கி இருந்த வெங்கடேஷ் பாபுவை போலீசார் கைது செய்தனர். தனது நிலத்தை விற்றுவிட்டு மகளுடன் அமெரிக்கா செல்ல உள்ளதாக ஓட்டுநர் வெங்கடேஷ் பாபுவுடன் கூறியுள்ளார். நகை, சொத்துகளை அபகரிக்க திட்டமிட்டு 2014ல் மருத்துவரை கூட்டாளிகளுடன் சேர்ந்து ஓட்டுநர் கொலை செய்தார். வழக்கில் 3 பேர் கைதான நிலையில் 2017ல் ஜாமினில் வந்த வெங்டேஷ் பாபு தலைமறைவாகி விட்டார்.

# பேசின்பாலம் பகுதியில் சிக்கன் கடை ஊழியர் மீது தாக்குதல்: ஒருவர் கைது

**சென்னை நவ 05-**

சென்னை, புளியந்தோப்பு, ஆடுதொட்டி, 8வது தெருவில் வசித்து வரும் முகமதுகான், என்பவர் கே.பி பார்க், மோதிலால் தெரு சந்திப்பில் உள்ள சிக்கன் கடையில் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 2 ந் தேதி அன்று இரவு, மேற்படி சிக்கன் கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த தெரிந்த நபரான மணிகண்டன் மற்றும் அவரது நண்பர் உட்பட இருவர் சேர்ந்து, மேற்படி முகமதுகானிடம் பணம் கேட்டுள்ளனர். முகமதுகான் பணம் தர மறுக்கவே, அவரை தகாத வார்த்தைகள் பேசி, கையால் தாக்கி, சிக்கன் கடையின் கல்லாவில் வைத்திருந்த பணம் ரூ.135/-ஐ எடுத்துக் கொண்டு, கடையில் கறி வெட்ட வைத்திருந்த கத்தியைக் காட்டி மிரட்டி, அங்கிருந்து இருவரும் தப்பிச் சென்றனர். இச்சம்பவத்தில் இரத்த காயமடைந்த முகமதுகான் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மேற்படி சம்பவம் குறித்து, கொடுத்த புகாரின்பேரில், பேசின்பாலம் காவல் நிலையத்தில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.பேசின்பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி மணிகண்டன், என்பவரை கைது செய்தனர்.

# எஸ்.ஆர்.எம். பிரைம் மருத்துவமனையில் இரைப்பை மற்றும் கல்லீரல் சிகிச்சை மையம் தொடக்கம்

**சென்னை, நவ 05-**

சென்னையின் முன்னணி பல்நோக்கு மருத்துவமனைகளில் ஒன்றான எஸ்.ஆர்.எம். பிரைம் மருத்துவமனையானது, தென்னிந்தியாவின் மேம்பட்ட எண்டோஸ்கோபிக் பிரிவுடன் கூடிய இரைப்பை - குடல் மற்றும் கல்லீரல் சிகிச்சை மையத்தை ராமாபுரத்தில் உள்ள மருத்துவமனை வளாகத்தில் தொடங்கியுள்ளது. இந்த நிகழ்ச்சியில் தமிழ் திரைப்பட இயக்குநரும், நடிகருமான ஆர். பார்த்திபன், மருத்துவமனையின் தலைமை நிர்வாக அதிகாரி பி.சிவா, இரைப்பை - குடல் மற்றும் கல்லீரல் நலத் துறை தலைவரும், முதுநிலை மருத்துவ நிபுணருமான டாக்டர் அருள்பிரகாஷ், இரைப்பை - குடல் மற்றும் கல்லீரல் நலத் துறை முதுநிலை மருத்துவ நிபுணர் டாக்டர் தருண் ஜெ. ஜார்ஜ் ஆகியோர் திறந்து வைத்தனர்.ஜீரண மண்டலத் துறையில் தேர்ந்த அனுபவமும், நிபுணத்துவமும் கொண்ட மருத்துவ வல்லுநர்கள் இந்த மையத்தில் சேவையாற்றுகின்றனர். மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப சாதனங்களாக விளங்கும் ஏரியேட்டா 750 மற்றும் இபி-8000 எண்டோஸ்கோபிக் அல்ட்ராசவுண்ட் ஆகியவையும் இங்கு நிறுவப்பட்டுள்ளன.

அவை ஒலிம்பஸ் எக்ஸ் 1 என்ற மருத்துவத் தளத்துடன் இணைந்து உயர் காட்சித்திறன் கொண்ட தெளிவான படங்களை (இமேஜிங்) வழங்குகிறது. இதுதொடர்பாக தொடக்க நிகழ்வில் பி. சிவா பேசுகையில்* , “உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தையும், மிகவும் திறமையான மருத்துவர்கள் மற்றும் செவிலியர் குழுவையும் ஒருங்கிணைத்து, விரிவான சிகிச்சையை ஒரே இடத்தில் வழங்குவதை எஸ்.ஆர்.எம். பிரைம் மருத்துவமனை நோக்கமாக கொண்டுள்ளது.

இந்த புதிய சிகிச்சை மையம், இரைப்பை - குடல் மருத்துவத்துக்கென ஒரு உயர் சிறப்பு கட்டமைப்பாக உருவெடுக்கும் ஆற்றல் மிக்கது. தொடக்கநிலை பரிசோதனை முதல் மேம்பட்ட 24/7 அவசர சிகிச்சை வரை உலகளாவிய தரத்திலான மருத்துவ சேவைகளை வழங்குவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்” என்று கூறினார்.

# பூந்தமல்லியில் கல்லூரி மாணவர்களை குறிவைத்து கஞ்சா விற்ற வாலிபர் கைது

**சென்னை நவ 05-**

பூந்தமல்லியில் கஞ்சா வைத்திருந்த வடமாநில வாலிபரை நேற்று மாலை போலீசார் மடக்கி பிடித்து கைது செய்தனர். அவரது சூட்கேசில் இருந்து 10 கிலோ கஞ்சா பார்சல் பறிமுதல் செய்யப்பட்டது. பூந்தமல்லி உள்பட சுற்றுவட்டார பகுதிகளில் கல்லூரி மாணவர்களை குறிவைத்து கஞ்சா விற்பனை நடைபெறுவதாக பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து, நேற்று பூந்தமல்லி, குமணன்சாவடி பகுதியில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு இன்ஸ்பெக்டர் சுபாஷினி தலைமையில் எஸ்ஐ நாட்டாளம்மை மற்றும் போலீசார் தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டனர்.அப்போது அப்பகுதியில் சந்தேக நிலையில் ஒரு வடமாநில வாலிபர் கையில் சூட்கேசுடன் சுற்றி திரிவதை போலீசார் கண்டறிந்தனர். அவரது சூட்கேசை போலீசார் சோதனை செய்தனர். அதற்குள் 10 கிலோ கஞ்சா பார்சல் இருந்தது. விசாரணையில், அவர் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த கனாநாத் மாலிக் (33) என்பதும், இவர் ஒடிசாவில் இருந்து மொத்தமாக கஞ்சாவை வாங்கி, ரயிலில் கடத்தி வந்து, பூந்தமல்லி பகுதியில் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களை குறிவைத்து விற்பனை செய்து வருவது தெரியவந்தது. அவரை கைது செய்தனர். அவரிடம் இருந்து 10 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# போதைப்பொருள் வைத்திருந்த தனியார் வங்கி ஊழியர் கைது

**சென்னை நவ 05-**

சென்னை மீனம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் மீனம்பாக்கம், இரயில்வே ஸ்டேசன் சாலை அருகில் கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த நபரை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர் எல்.எஸ்.டி. ஸ்டாம்ப் என்ற போதைப்பொருளை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, போதைப்பொருள் வைத்திருந்த தீபக், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 121 எல்.எஸ்.டி ஸ்டாம்ப்புகள் பறிமுதல் செய்யப்பட்டது.

## கடலூர் மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கான வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாக கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு வருகிறது

## கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தகவல்



**கடலூர் நவ 05-**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி, நெய்வேலி, குறிஞ்சிப்பாடி மற்றும் கடலூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகளான வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் /கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் இன்று (04.11.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது மாவட்ட தேர்தல் அலுவலர்/கலெக்டர் தெரிவிக்கையில், கடலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி பல்வேறு கட்டங்களாக 28.10.2025 முதல் 07.02.2026 வரை நடைபெறுகிறது. 9 சட்டமன்ற தொகுதிகளிலும் 27.10.2025 அன்றைய நிலைப்படி 21,93,577 வாக்காளர்கள் உள்ளனர். 04.11.2025 இன்று முதல் தொடங்கி 04.12.2025 வரை வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கணக்கெடுப்பு படிவம் வீடு வீடாக வாக்காளர்களுக்கு அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணிக்காக 151-திட்டக்குடி சட்டமன்ற தொகுதிக்கு 248, 152-விருத்தாசலம் சட்டமன்ற தொகுதிக்கு 288, 153-நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்கு 234, 154-பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்கு 259, 155- கடலூர் சட்டமன்ற தொகுதிக்கு 227, 156-குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு 259, 157-புவனகிரி சட்டமன்ற தொகுதிக்கு 283, 158-சிதம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு 260, 159-காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதிக்கு 257 என மொத்தம் 2,313 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலம் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் 2 படிவங்கள் வழங்கப்படும். மேலும் இப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் போதிய உதவி புரிவார்கள். வாக்காளர்கள் முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு இரண்டு படிவங்களில் ஒன்றினை மட்டும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் சமர்ப்பித்திட வேண்டும். அவ்வபோது, வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்கள் இல்லத்திற்கு நேரில் வரும் போது வாக்காளர் இல்லாத பட்சத்தில் அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவினர் படிவத்தினை முறையாக பூர்த்தி செய்து கையொப்பமிட்டு வழங்கலாம். 2002 வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் பெயர் இடம்பெறாமல் இருந்தால் கணக்கெடுக்கும் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உறவினரின் பெயர், அடையாள அட்டை, உறவு முறை, சட்டமன்ற தொகுதியின் பெயர், பாகம் எண், வரிசை எண் போன்றவற்றை பூர்த்தி செய்திடவும் வழிவகை செய்திட வேண்டும். அச்சமயம் எவ்வித ஆவணமும் இணைத்து வழங்க தேவையில்லை. அவ்வாறு பெறப்படும் படிவங்களில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். எனவே, வாக்காளர்கள் தங்கள் வீடு தேடி வரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் /கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார். ஆய்வின் போது, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன், துணை ஆட்சியர் முத்திரைத்தாள் தனலட்சுமி, நெய்வேலி தனித் துணை ஆட்சியர் (நிலஎடுப்பு) வில்சன், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் பன்னீர் செல்வம், மாநகராட்சி ஆணையாளர் முஜிபூர் ரஹ்மான், நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணராஜன், துணை ஆட்சியர் பயிற்சி கே.டியூக் பார்க்கர் உட்பட பலர் உள்ளனர்.

## புதுச்சேரி

# உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி ஆணை: முதல்வர் ரங்கசாமி வழங்கினார்



**புதுச்சேரி நவ 05-**

புதுச்சேரி மற்றும் காரைக்கால் வட்டாரப் பகுதியில் உள்ள பல்வேறு குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்த ஐந்து உதவி அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டதற்கான பணி ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார். புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பின்வரும் ஐந்து வழக்குரைஞர்களை உதவி அரசு குற்றவியல் வழக்குரைஞர்களாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கு ஆணையிட்டிருந்தார். 1. இளங்கோவன், தந்தை பெயர் புண்ணியகோடி.A. VI- குற்றவியல் நடுவர் நீதிமன்றம் புதுச்சேரி. 2. ஜெயமாரிமுத்து, தந்தை பெயர் விஜயகுமார் மகளிர் நீதிமன்றம் புதுச்சேரி 3. ஜெரால்ட் இமானுவேல், தந்தை பெயர் மனோகரன், M.P. V- குற்றவியல் நடுவர் நீதிமன்றம் புதுச்சேரி. 4. தேவேந்திரன் தந்தை பெயர் வேலாயுதம்.VII- குற்றவியல் நடுவர் நீதிமன்றம் புதுச்சேரி. 5. இயேசு ராஜ், தந்தை பெயர் ஆபிரகாம்.A., I- குற்றவியல் நடுவர் நீதிமன்றம் காரைக்கால். மேற்சொன்ன புதுச்சேரி மற்றும் காரைக்கால் வட்டாரப் பகுதியில் உள்ள பல்வேறு குற்றவியல் நீதிமன்றங்களில் ஐந்து உதவி அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டதற்கான பணி ஆணைகளை முதலமைச்சர் வழக்குரைஞர்களிடம் புதுச்சேரி சட்டப்பேரவையில் முதலமைச்சர் அலுவலக அறையில் வழங்கினார். இந்த நிகழ்வின் போது புதுச்சேரி சட்டச் செயலர் விக்ராந்த் ராஜா,, மற்றும் சட்டத்துறையின் சார்புச் செயலர் . ஜானாஸ் ரபி என்கிற ஜான்சி உடனிருந்தனர். மேற்சொன்ன சட்ட அலுவலர்களின் பணியமர்த்தமானது புதுச்சேரி அரசு சட்டத்துறையின் 11. 6. 2021 தேதியிட்ட புதுச்சேரி அரசு ஆணை பல்வகை எண் 22/2021-LDஇல் அறிவிக்கை செய்யப்பட்ட 2021ஆம் ஆண்டு புதுச்சேரி சட்ட அலுவலர்கள் (பணியமர்த்தம் மற்றும் பணி நிபந்தனைகள்) விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருக்கும். இந்த ஆணையானது துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி வெளியிடப்பட்டது ஆகும். ஜனாஸ் ரபி என்கிற ஜான்சி சார்புச் செயலர் (சட்டம்)

இந்நிகழ்வின்போது புதுச்சேரி வழக்கறிஞர் சங்க தலைவர் சி. டி. ரமேஷ், பொதுச்செயலாளர் நாராயணகுமார், பொருளாளர் ராஜ பிரகாஷ் ஆகியோர் உடன் இருந்தனர்

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்: மு.பெ.கிரி எம்எல்ஏ வழங்கினார்



**திருவண்ணாமலை, நவ.05-**

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட தானிப்பாடி ஊராட்சியில் சிறப்பு திட்டங்களில் ஒன்றான உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நேற்று நடந்தது. இந்த முகாமிற்கு தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) ரவிந்திரநாதன் தலைமை தாங்கினார். திமுக தண்டராம்பட்டு ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம் மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் பொன்.தனுசு முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் முத்துமாறன் ஆகியோர் முன்னிலை வகிக்க தண்டராம்பட்டு தாசில்தார் கே.துரைராஜ் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட மு.பெ.கிரி எம்எல்ஏ முகாமினை ஆய்வு செய்த அவர் உடனடி தீர்வு காணப்பட்ட மனுதாரர்களுக்கு பட்டா மாறுதல் மருத்துவ காப்பீட்டு அட்டை உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்த முகாமில் இயற்கை விவசாயிகள் இயக்க மாநில பொதுச் செயலாளர் எஸ்.ஆர்.ஜாகீர்ஷா எஸ்.ஆர்.ஜெ.பார்ம் எக்யூப்மென்ட்ஸ் மேலாண்மை இயக்குநர் ஆஜாத் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் ஒய்.அப்துல்ரகுப் மண்டல துணை தாசில்தார் மணவாளன் வருவாய் ஆய்வாளர் பவுன்குமார் கிராம நிர்வாக அலுவலர்கள் ஏழுமலை சிலம்பரசன் மற்றும் ஊரக வளர்ச்சி அலுவலர்கள் வருவாய்த்துறை அலுவலர்கள் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொது மக்கள் கலந்துகொண்டனர். முடிவில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஷ் நன்றி கூறினார்.

# ஊனமுற்றவர்களுக்கு கால் அளவெடுத்தல் இலவச முகாம்



**அரக்கோணம் நவ 05-**

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் கிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் ஊனமுற்றவர்களின் கால் அளவெடுத்தல் இலவச முகாம் நடைபெற்றது இந்த முகாமிற்கு அரக்கோணம் இந்திய கடற்படை நகர லயன் சங்கம் மற்றும் பெங்களூரு அங்க காருண்யா கேந்திரா மற்றும் கிருஷ்ணா கல்வி குழுமம் இணைந்து நடத்திய முகாமிற்கு கிருஷ்ணா கல்வி குழும்பத் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் தலைமை தாங்கினார் மாவட்ட தலைவர்கள் ஜி எம் மூர்த்தி, குணசேகரன், ஜெகதீசன் முன்னிலை வைத்தனர் செயலாளர் மாதவன் வரவேற்றார் முன்னாள் ஆளுநர் நந்தகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர் ரூபாய் 2.86 லட்சம் மதிப்பிலான உபகரண அளவிடுத்தல் மூலம் 65 பேர் பயனடைந்தனர் இறுதியில் பொருளாளர் அப்துல் நசீர் நன்றி கூறினார்

## விழுப்புரம் மாவட்டம்

# அய்யங்கோயில்பட்டு ஊராட்சியில் ஏரிக்கரையோரம் கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் மரக்கன்றுகளை நட்டார்



**விழுப்புரம் நவ 05-**

விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஒன்றியத்திற்குட்பட்ட அய்யங்கோயில்பட்டு ஊராட்சி முத்தாம்பாளையம் ஏரிக்கரையோரம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று (04.11.2025) மரக்கன்றுகளை நட்டு வைத்தார். கலெக்டர் தெரிவிக்கையில் வரவிருக்கின்ற பருவமழையினை எதிர்கொள்ளும் விதமாகவும் ஏரி மற்றும் குளங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றுதல் மற்றும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் நீர்நிலைகள் புனரமைக்கும் பணிகள் நீர்வளத் துறை ஊரக வளாச்சித்துறை மற்றும் வருவாய்த்துறையினர் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் முத்தாம்பாளையம் ஏரியினை தன்னார்வலர்களுடன் நீர்வளத்துறை ஊரக வளர்ச்சித்துறை மற்றும் வருவாய்த்துறை இணைந்து புனரமைக்கும் பணி செய்யப்பட்டது. அந்த வகையில் இன்றைய தினம் முத்தாம்பாளையம் ஏரிக்கரையோரம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் ரூ2.72 இலட்சம் மதிப்பீட்டில் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டது என கலெக்டர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்தார். இந்நிகழ்வில் உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங்கடேஷ்வரன் நீர்வளத்துறை செயற்பொறியாளர் அருணகிரி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மஞ்சுளா நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சிவக்குமார் நீர்வளத்துறை உதவி பொறியாளர் கார்த்திக் விக்கிரவாண்டி வருவாய் வட்டாட்சியர் செல்வமூர்த்தி தமிழ்நாடு அரசு நீர்நிலை பாதுகாவலர் மணிகண்டன் மாவட்ட பசுமை தோழர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# ஜோலார்பேட்டை அருகே 1 கிலோ கஞ்சா பறிமுதல்: போலீசார் விசாரணை

**திருப்பத்தூர், நவ 05-**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே காவல்துறையினர் நடத்திய அதிரடி நடவடிக்கையில் ஒரு கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது ஜோலார்பேட்டை பாய்ச்சல் பகுதியைச் சேர்ந்த குமார் என்பவரின் மகன் தமிழரசன் என்ற இளைஞர் விற்பனை நோக்கத்தில் கஞ்சா வாங்கி வந்து, ஜோலார்பேட்டை பார்சம்பேட்டை ரயில்வே மேம்பாலம் அருகிலுள்ள மறைவான இடத்தில் பிளாஸ்டிக் கவர்களில் பேக் செய்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அந்த நேரத்தில், திருப்பத்தூர் டிஎஸ்பி சௌமியா தலைமையிலான தனிப்படை ரோந்து சென்றபோது, சந்தேகத்திற்கிடமாக இருந்த தமிழரசனை பிடித்து விசாரணை நடத்தினர். பின்னர் அவரது பையில் சோதனை செய்தபோது, விற்பனைக்காக வைத்திருந்த ஒரு கிலோ கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது. அதை காவல் துறையினர் பறிமுதல் செய்து, தமிழரசனை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருப்பத்தூர்: கந்திலி அருகே 3000 ஆண்டுகளுக்கு முந்தைய மண் ஓடுகள் கண்டுபிடிப்பு



**திருப்பத்தூர், நவ 05-**

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அருகே தொப்பளக் கவுண்டனூர் பகுதியில் ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலக் காலத்தினைச் சேர்ந்த மண் ஓடுகள் மற்றும் கல்வட்டத் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் சில மாதங்களுக்கு முன்பு, தொப்பளக்ஜ கவுண்டனூரில் தனியார் மாந்தோப்பில் விவசாயப் பணிக்காக ஜே.சி.பி. இயந்திரம் பயன்படுத்தியபோது, பல பானை ஓடுகள் வெளிப்பட்டன. அப்பகுதி இளைஞர்கள் இதுகுறித்து அளித்த தகவலின் அடிப்படையில், ஆய்வுக் குழு அங்கு சென்று மேற்பரப்பில் சிதறியிருந்த ஓடுகளை சேகரித்து ஆய்வு மேற்கொண்டது. அப்பகுதியில் கல்வட்டங்கள் (Cairn Circles) மற்றும் கற்திட்டைகள் (Demonised Cists) இருந்ததற்கான தடயங்களும் உறுதிப்படுத்தப்பட்டன. மேலும் மாந்தோப்பிலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் உள்ள குன்றின் அடிவாரத்தில், சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் கருப்பு மற்றும் சிவப்பு நிற மண்பாண்ட ஓடுகள் மற்றும் எலும்பு எச்சங்கள் காணப்பட்டன. பின்பு சேகரிக்கப்பட்ட ஓடுகள் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் பாரம்பரிய மையத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மேலும் நான்கு ஊன்றி நிற்கும் தானியக் குடுவைகள் போன்ற வடிவங்களும் காணப்பட்டன. இப்பொருட்கள் அனைத்தும் பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யும் போது உடன் வைத்துப் புதைத்த ஈமப் பொருட்கள் என அறியப்படுகிறது. மேலும் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட தடயங்களின் அடிப்படையில், தமிழக அரசின் தொல்லியல் துறைக்கு ஆய்வறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இந்த முக்கியமான தொல்லியல் கண்டுபிடிப்பை திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் முனைவர் ஆ. பிரபு, தொல்லியல் ஆய்வாளரும் வரலாற்றுத் துறை பேராசிரியருமான முனைவர் இரா. சேகர், ஆய்வு மாணவிகள் உமா, ரம்யா, பூந்தமிழ் மற்றும் சமூக ஆர்வலர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் இணைந்துபின்னர் மேற்கொண்ட கள ஆய்வில் வெளிக்கொணர்ந்துனர்.

IN THE COURT OF THE ADDITIONAL
DISTRICT MUNSIF AT KARAIKAL
I.A. No. 1 /2025 in
O.S. No. 296/2017
1. Stanislas (Died)
Rep by his L.R's is Petitioner No. 8 to 10
2. Jayakodi (Died)
Nj7Rep by his L.R's is Petitioner
No. 8 to 10
3. Jayakumari
4. Madharasi
5. Lourdesamy
6. Jhansi Marie
7. Clara Marie
... Petitioners/Plaintiffs
8. Santhana Mary
9. Jayaseelan
10. Jayaseeli Immaculate
... Petitioners/Proposed Parties
11. Lourdumary @ Jayanthi
12. Matharasammal
13. Mariadass
14. Vinola
... Petitioners/Proposed Parties
Vs.
1. Abdul Kader
And 19 others
... Respondents/Defendants
PUBLIC NOTICE
It is hereby informed to the public that the suit filed by the aforesaid plaintiffs for declaration that they plaintiffs for declaration and permanent Injunction and other reliefs. It is posted on 05.11.2025 for the objections from the public if any. If anybody having any objections in the above said suit, they can appear before the said court and file their objections in person or through their pleader, failing which the suit will be decided on merits by the said court.
RAMYA RAMACHANDRAN,
Advocate, PUDUCHERRY.

## புதுச்சேரியில்

# மின் கட்டண உயர்வை திரும்ப பெற வலியுறுத்தி இந்தியா கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்

**புதுச்சேரி நவ 05-**

புதுச்சேரியில் ஆண்டுதோறும் இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி உடன் மின் கட்டணம் உயர்த்தப்பட்டு வருகிறது கடந்த ஜூன் மாதம் ஒரு யூனிட்டுக்கு 45 பைசா வீதம் மின்கட்டணம் உயர்த்தப்பட்டது இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது இதை எடுத்து புதுவை அரசு அந்த மின் கட்டண உயர்வை மானியமாக மாற்றியது இந்த நிலையில் அக்டோபர் 1 ஒன்னாம் தேதி முதல் முன் தேதியிட்டு மீண்டும் மின்கட்டணம் யூனிட்டுக்கு 20 பைசா விதம் உயர்த்தப்பட்டது ஒரே ஆண்டில் இரண்டு முறை மின் உயர்வுக்கு அரசியல் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்தனர் இதனை திரும்ப பெற வலியுறுத்தியும் வருகின்றனர் இந்த நிலையில் மின்துறை அமைச்சர் நமச்சிவாயம் கடந்த முறை போல் இந்த முறையும் மின் கட்டண உயர்வை அரசு மானியமாக ஏற்கும் என அறிவித்துள்ளார் இது தொடர்பான கோப்பு பரிசீலணையில் இருப்பதாக துணை நிலை ஆளுநர் கைலாஷ் நாதன் தெரிவித்துள்ளார் இந்த நிலையில் மின் கட்டண உயர்வை திரும்ப பெறக் கூறி இந்தியா கூட்டணி கட்சியினர் ஊர்வலமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த ஆர்ப்பாட்டம் மெஷின் வீதி ஜென்ம ராகினி கோவில் அருகே இருந்து புறப்பட்ட ஊர்வலத்திற்கு மாநில காங்கிரஸ் தலைவரும் எம்பியுமான வைத்தியலிங்கம், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் திமுக அமைப்பாளருமான சிவா எம்எல்ஏ, இந்திய மாநில இந்திய மாநில கம்யூனிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், விடுதலைக் கட்சிகள் முதன்மை செயல தேவப்பொழிலன், மார்க் லிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலர் ராமச்சந்திரன், ஆகியோர் தலைமை தாங்கினார் ஊர்வலம் அம்பலத்து மாலையார் வீதி வழியாக தலைமை செயலகம் நோக்கி வந்தது அப்போது ஆம்பூர் சாலை அருகே போலீசார் தடுப்பு கட்டைகளை அமைத்து தடுத்தனர் இதனை அடுத்து அங்கு இந்தியா கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் ஷாஜகான், கந்தசாமி திமுக அவைத் தலைவர் எஸ் பி சிவக்குமார், திமுக எம்எல்ஏக்கள் அனிபால் கென்னடி, சம்பத், செந்தில்குமார், முன்னாள் எம்எல்ஏக்கள் ஆனந்த ராமன், பாலன், நாரா கலைநாதன், காங்கிரஸ் சீனியர் துணைத் தலைவர் தேவதாஸ், ஏ ஐ டி யு சி சேதுசெல்வம் , சி ஐ டி யூ சீனிவாசன், தி மு க தலைமை பொதுக் குழு உறுப்பினர் மு பிர பா க ரன், வழக்கறிஞர் மருது பாண்டியன் உட்பட ஏரா ள மான தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்



**திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம் அயனம்பாக்கம் பகுதியை சேர்ந்த தமீம்அன்சாரி (எ) தமிழரசு-வசந்தா தம்பதியினரின் 2 குழந்தைகள் ரியாஸ் (5) மற்றும் ரிஸ்வான்(3) ஆகியோர் நீரில் மூழ்கி உயிரிழந்ததால் முதலமைச்சர்பொதுநிவாரணநிதியிலிருந்துதலாரூ.3லட்சம் வீதம் மொத்தம் ரூ,6 லட்சம் மதிப்பிலான நிதி உதவிக்கான காசோலைகளை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் முன்னிலையில் ஆறுதல் கூறி வழங்கினார்.**

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4. Ph:0413-2280613 E-Mail: pondyedi@thinaboomi.com RNI. Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்**
**2025–2026 (SADP) சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம்**

**ந.க.எண்.293/2025** **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** **நாள்: 30.10.2025**

திண்டுக்கல் மாவட்டம், **ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சியில் 2025–2026 SADP சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின்** கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **17.11.2025ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** இணையதளத்தின் மூலமாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இணையதளத்தின் மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை **அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு** இணையதளத்தின் மூலம் பரிசீலிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **14.11.2025 ஆம் தேதி மாலை 5.30 மணி வரை https://tntenders.gov.in** என்ற வலைதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வேலையின் பெயர்: **ஸ்ரீராமபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியான 11வது வார்டு சங்கரலிங்கபுரம் முதல் பெரியகோம்பை டேம் வரை தடுப்புச்சுவருடன் கூடிய தார்சாலை அமைத்தல்.** மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்: **146.00;** முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் : **146000;** ஒப்பந்ததாரரின் தகுதி : **Class – I**

**1.** செலுத்தப்பட வேண்டிய முன்வைப்பு தொகையினை “Directorate of Town Panchayats / Dindigul Zone / Sriramapuram Town Panchayat” என்ற தலைப்பில் செலுத்தப்பட்டதற்கான சலான் இணைக்கப்பட வேண்டும். **2.** ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட இதர நிபந்தனைகளை ஸ்ரீராமபுரம் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். **3.** இத்திட்டம் கட்டுமானப்பணி முடிக்கப்பட்டவுடன், ஐந்தாண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு கட்டுமானம் பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்தச் செலவில் சீரமைத்து தரவேண்டும்.

திருமதி. **க. கல்பனா, செயல் அலுவலர்,**
ஸ்ரீராமபுரம் முதல் நிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

செ.ம.தொ.இ / **5972** / ஒப்பந்தப்புள்ளி / 2025

திருமதி. **அ. சகிலா, தலைவர்,**
ஸ்ரீராமபுரம் முதல் நிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

# ஐ.சி.சி. மகளிர் பேட்டிங் தரவரிசை:
# 10-ம் இடத்திற்கு முன்னேறினார் ஜெமிமா

**துபாய், நவ. 05-**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலில்(ஐ.சி.சி.) ஒரு நாள் கிரிக்கெட்டின் பேட்டிங் தரவரிசையில் தென்னாப்பிரிக்க அணியின் கேப்டன் லாரா 814 புள்ளிகளுடன் இந்திய துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனாவைப் பின்னுக்குத்தள்ளி முதல் முறையாக தனது சிறந்த தரநிலையுடன் முதலிடத்துக்கு லாரா வோல்வார்ட் முன்னேறியுள்ளார். ஸ்மிருதி ஒரு இடம் சரிந்து 811 புள்ளிகளைப் பெற்றுள்ளார். ஜெமிமா ரோட்ரிக்ஸ் அதிரடியாக 9 இடங்கள் முன்னேறி 658 புள்ளிகளுடன் 10 இடத்தைப் பிடித்துள்ளார்.



**இந்தியா சாம்பியன்...**

இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்ற மகளிருக்கான உலகக் கோப்பையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நிறைவடைந்தது. இந்தியா - தென்னாப்பிரிக்க அணிகள் மோதிய ஆட்டத்தில் இந்திய அணி முதல் முறையாக கோப்பையை உச்சிமுகர்ந்தது. அதிரடியாக ஆடி கடைசிவரைப் போராடிய தென்னாப்பிரிக்க அணி கேப்டன் லாரா வோல்வார்ட் 101 ரன்கள் எடுத்தும், அவரது அணிக்கு பலனளிக்கவில்லை. இறுதிப்போட்டி மட்டுமின்றி இங்கிலாந்துக்கு எதிரான அரையிறுதிப் போட்டியிலும் அதிரடி ஆட்டத்தைக் காண்பித்த லாரா வோல்வார்ட் 167 ரன்கள் குவித்திருந்தார். மேலும், ஒருநாள் உலகக் கோப்பை தொடரில் மட்டும் 571 ரன்களைக் குவித்து புதிய சாதனையும் படைத்தார்.

**814 புள்ளிகளுடன்...**

இந்த நிலையில், ஐ.சி.சி. மகளிருக்கான ஒருநாள் தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. ஒரு நாள் உலகக் கோப்பைத் தொடரில் தனது அதிரடியைக்காட்டிய லாரா வோல்வார்ட், 814 புள்ளிகளுடன் இந்திய துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனாவைப் பின்னுக்குத்தள்ளி முதல் முறையாக தனது சிறந்த தரநிலையுடன் முதலிடத்துக்கு லாரா வோல்வார்ட் முன்னேறியுள்ளார். ஸ்மிருதி ஒரு இடம் சரிந்து 811 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

**ஜெமிமா ரோட்ரிக்ஸ்...**

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய நிர்ணயித்த 339 ரன்கள் இலக்கை விரட்டிப்பிடித்து 127 ரன்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த நட்சத்திர வீராங்கனை ஜெமிமா ரோட்ரிக்ஸ் அதிரடியாக 9 இடங்கள் முன்னேறி 658 புள்ளிகளுடன் 10 இடத்தைப் பிடித்துள்ளார். ஆஸ்திரேலிய வீராங்கனை எல்லீஸ் பெர்ரி 3 இடங்கள் முன்னேறி நியூசிலாந்து வீராங்கனை சோஃபி டிவைனுடன் 7 இடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

**பந்துவீச்சாளர்கள்...**

பந்துவீச்சாளர்கள் வரிசையில் இங்கிலாந்தின் சோபி எக்லஸ்டோன் முதலிடத்தில் தொடருகிறார். தென் ஆப்பிரிக்காவின் மரிஜானே காப் 2 இடங்கள் முன்னேறி 2-வது இடத்தை பிடித்துள்ளார். இந்தியாவின் தீப்தி சர்மா 5-வது இடத்தில் தொடருகிறார். ஆல் ரவுண்டர்கள் வரிசையில் முதல் 3 இடங்களில் மாற்றமில்லை. ஆஷ்லே கார்னர், மரிஜானே காப், ஹேலி மேத்யூஸ் ஆகியோர் முறையே முதல் 3 இடங்களில் தொடருகின்றனர். இந்திய வீராங்கனை தீப்தி சர்மா ஒரு இடம் முன்னேறி 4-வது இடத்தை பிடித்துள்ளார்.

## ஒருநாள் பேட்டிங் தரவரிசை:

1) லாரா வோல்வார்ட் - 814 புள்ளிகள்.
2) ஸ்மிருதி மந்தனா - 811 புள்ளிகள்.
3) அஷ்லெய் கார்ட்னர் - 738 புள்ளிகள்.
4) நாட் ஷிவர் ப்ரண்ட் - 714 புள்ளிகள்.
5) பெத் மூனி - 700 புள்ளிகள்.
6) அலிசா ஹீலி - 688 புள்ளிகள்.
7) சோஃபி டிவைன் - 669 புள்ளிகள்.
8) எல்லீஸ் பெர்ரி - 669 புள்ளிகள்.
9) ஹேலே மேத்யூஸ்-663 புள்ளிகள்.
10) ஜெமிமா ரோட்ரிக்ஸ் - 658 புள்ளிகள்.

# த.வெ.க.வில் 2,827 பேருக்கு பொறுப்பு

**சென்னை, நவ. 05-**

2,827 த.வெ.க. நிர்வாகிகளுக்கு விஜய் பொறுப்புகளை வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

கரூர் சம்பவத்தை தொடர்ந்து சட்டசபை தேர்தலை சந்திக்க த.வெ.க. மீண்டும் தீவிரம் காட்டி வருகிறது. அந்தவகையில், கட்சி தொடங்கியதில் இருந்து நிரப்படாமல் இருந்து வந்த இளைஞரணி, மகளிரணி மாவட்ட, வட்ட, ஒன்றியங்களுக்கு நிர்வாகிகளை விஜய் அறிவித்துள்ளார். இளைஞரணி, மாணவரணி, தொண்டரணி என அணிகளுடன், மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட அமைப்பாளர், 10 இணை அமைப்பாளர்கள் என தமிழ்நாடு முழுவதும் 2,827 பதவியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை விஜய் வெளியிட்டுள்ளார். புதியதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு மாவட்ட நிர்வாகிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்கத்தின் மாநிலத் தலைவர் ரவீந்திரன் கெங்குசாமி நாயுடு, மாநில செயல் தலைவர் வி.மோகன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கோவை அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி.நாயுடுவின் பெயரை சூட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## உலகக்கோப்பையை வென்ற இந்திய அணி:
# வீராங்கனைகளின் விளம்பர மதிப்பு பல மடங்காக உயர்வு

**புதுடெல்லி, நவ. 05-**

முதல்முறையாக உலக கோப்பையை இந்திய அணி வென்று வரலாறு படைத்தன் மூலம், இந்திய வீராங்கனைகளின் விளம்பர மதிப்பு பல மடங்கு உயர்வடைந்து உள்ளது.

**வரலாறு படைத்தது...**

8 அணிகள் பங்கேற்ற 13-வது மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவில் கடந்த செப்டம்பர் 30-ந்தேதி தொடங்கி நடந்தது. இந்த கிரிக்கெட் திருவிழாவில் இந்திய வீராங்கனைகள் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடி பாராட்டுகளை பெற்றனர். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரை இறுதி போட்டியில் இந்திய அணி அபார வெற்றி பெற்று, இறுதி போட்டிக்குள் நுழைந்தது. இறுதி போட்டியில், தென்ஆப்பிரிக்க அணியை 52 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதல்முறையாக உலக கோப்பையை இந்திய அணி வென்று வரலாறு படைத்தது. இந்த வெற்றிக்கு பின்னர், வீராங்கனைகளின் விளம்பர மதிப்பு பல மடங்கு உயர்வடைந்து உள்ளது.

**சமூக ஊடக கணக்குகளை...**

இதுபற்றி வெளிவந்து உள்ள தகவலில், ஜெமிமா ரோட்ரிக்ஸ், ஸ்மிரிதி மந்தனா, ஹர்மன்ப்ரீத் கவுர், தீப்தி ஷர்மா, ஷபாலி வர்மா ஆகியோரின் சமூக ஊடக கணக்குகளை பின்பற்றுவோர் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. இதுதவிர, அவர்களின் பிராண்ட் மதிப்பும் கூடியுள்ளது. இதன்படி, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அரை இறுதி போட்டியில், 127 (நாட் அவுட்) ரன்களை குவித்த ஜெமிமாவின் விளம்பர மதிப்பு 100 சதவீதம் அளவுக்கு உயர்ந்து உள்ளது.

**ரூ.1.5 கோடிக்கு உயர்த்தி...**

இதுபற்றி ஜெமிமாவுக்கான விளம்பரங்களை நிர்வகிக்க கூடிய ஏஜென்சியை சேர்ந்த தலைமை வர்த்தக அதிகாரியான கரண் யாதவ் கூறும்போது, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டி முடிந்ததுமே உடனடியாக எங்களுக்கு கோரிக்கைகள் வந்து குவிந்து விட்டன. 10 முதல் 12 பிரிவுகளை சேர்ந்த விளம்பர நிறுவனங்களுடன் நாங்கள் பேசி வருகிறோம் என்றார். இதனால், ஜெமிமா வருவானை ரூ.75 லட்சம் என்பதில் இருந்து ரூ.1.5 கோடி என்ற அளவுக்கு ஜெமிமா உயர்த்தி விட்டார். இது அந்நிறுவனத்துடனான நீண்டகால தொடர்பு உள்ளிட்டவற்றுக்கு ஏற்ப மாறுபடும்.

**ஸ்மிரிதி மந்தனா முதலிடம்...**

நாட்டிலேயே அதிக சம்பளம் பெறும் கிரிக்கெட் வீராங்கனையான ஸ்மிரிதி மந்தனா (வயது 25) ஏறக்குறைய 16 நிறுவனங்களுக்கு விளம்பர தூதராக உள்ளார். அவற்றில் நைக், ஹுண்டாய், எஸ்.பி.ஐ. உள்ளிட்டவையும் அடங்கும். இதன் மூலம் அவர் ஒரு நிறுவனத்திடம் இருந்து வருவாயாக ரூ.1.5 முதல் 2 கோடி வரை பெறுகிறார். இனி இவர்களை கையில் பிடிக்க முடியாது என்ற அளவுக்கு உலக கோப்பை வெற்றி அவர்களை உச்சத்துக்கு கொண்டு சென்று விட்டது.

# கிட்னி மோசடி வழக்கு: இ.பி.எஸ் குற்றச்சாட்டு

**சென்னை, நவ. 05-**

கிட்னி மோசடி வழக்கில் அரசு வழக்கறிஞர்கள் முறையாக வாதாடவில்லை என்று எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:- தமிழ்நாட்டில் போலி ஆவணங்கள் மூலம் சிறுநீரக மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மோசடியில் ஈடுபட்டதாக இரண்டு தனியார் மருத்துவமனைகளில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான உரிமத்தை இந்த அரசு ரத்து செய்தது. அந்த மருத்துவமனைகளில் ஒன்று மணச்சநல்லூர் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருக்கு சொந்தமானது.



இந்நிலையில், திருச்சியிலுள்ள சேதர் என்ற தனியார் மருத்துவமனை நிர்வாகம் மேற்படி உத்தரவை ரத்துச் செய்யக்கோரி சென்னை ஐகோர்ட் மதுரைக்கிளையில் வழக்கு தொடர்ந்தது. இவ்வழக்கு விசாரணைக்கு வந்த போது, தமிழக அரசின் சார்பில் ஆஜரான அரசு வழக்கறிஞர்கள் முறையாக வாதிடாததன் காரணமாக ஐகோர்ட் அரசின் உத்தரவை ரத்து செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

இந்த உத்தரவைக் காரணம் காட்டி, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான மருத்துவமனை நிர்வாகமும் ஐகோர்ட் மூலமாக தப்பித்துக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தான் பொறுப்பேற்க வேண்டும். 2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பேற்கும்போது, இந்த நிகழ்வில் யார் தவறிழைத்திருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தக்க தண்டனை பெற்றுத்தரப்படும் என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கபில்தேவ், டோனியுடன் ஹர்மன்பீரித்:
# சிறப்பு போஸ்டர் வெளியீடு

**மும்பை, நவ. 05-**

மகளிர் அணி 50 ஓவர் உலக கோப்பையை வென்றதன் மூலம் ஆண்கள் மற்றும் மகளிர் என இந்தியாவுக்கு 50 ஓவர் உலக கோப்பையை வாங்கி கொடுத்த கேப்டன்கள் பட்டியலில் ஹர்மன்ப்ரீத் கவுர் இணைந்ததை தொடர்ந்து ஹர்மன்ப்ரீத் கவுரை கவுரவிக்கும் வகையில் பி.சி.சி.ஐ. சிறப்பு போஸ்டரை வெளியிட்டுள்ள அவரை கவுரவப் படுத்தியுள்ளது.




**இந்தியா சாதனை...**

மகளிர் உலக கோப்பை இறுதிப் போட்டி (ஞாயிற்றுக்கிழமை) நவிமும்பையில் நடைபெற்றது. இந்த போட்டியில் தென்ஆப்பிரிக்காவை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது. அத்துடன், முதன்முறையாக மகளிர் அணி ஐ.சி.சி. தொடரை வென்று சாதனைப் படைத்துள்ளது. இதனால் பிசிசிஐ 50 கோடி ரூபாய்க்கு அதிகமான பரிசுத்தொகையை அறிவித்து கவுரவித்தது.

**கவுரவித்த பி.சி.சி.ஐ...**

இந்திய ஆண்கள் அணி இதற்கு முன் 50 ஓவர் உலக கோப்பையை 1983ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையில் வென்றுள்ளது. அதன்பின் 2011ஆம் ஆண்டு எம்.எஸ். டோனி தலைமையில் வென்றுள்ளது.தற்போது மகளிர் அணி 50 ஓவர் உலக கோப்பையை வென்றுள்ளது. ஆண்கள் மற்றும் மகளிர் என இந்தியாவுக்கு 50 ஓவர் உலக கோப்பையை வாங்கி கொடுத்த கேப்டன்கள் பட்டியலில் ஹர்மன்ப்ரீத் கவுர் இணைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து ஹர்மன்ப்ரீத் கவுரை கவுரவிக்கும் வகையில் பிசிசிஐ சிறப்பு போஸ்டரை வெளியிட்டுள்ளது.

# பிக்பாஷ் லீக்: அஸ்வின் விலகல்

பிக்பாஷ் லீக் (பி.பி.எல்), ஆஸ்திரேலியாவில் நடக்கும் பிரபலமான டி20 லீக் போட்டியாகும். இதன் 15-வது சீசன் இந்த ஆண்டு டிசம்பர் 14-ந்தேதி முதல் ஜனவரி 25-ந்தேதி வரை ஆஸ்திரேலியாவின் பல்வேறு நகரங்களில் நடக்கிறது. இந்த போட்டியில் பங்கேற்கும் 8 அணிகளில் ஒன்றான சிட்னி தண்டர் அணி, இந்திய முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான தமிழகத்தை சேர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வினை ஒப்பந்தம் செய்திருந்தது. அவர் இந்த சீசனில் கடைசி கட்ட போட்டிகளில் மட்டும் விளையாட இருந்தார்.

இந்நிலையில் இந்த பிக்பாஷ் சீசனிலிருந்து முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ரவிச்சந்திரன் அஸ்வின் விலகியுள்ளார். இது தொடர்பான அறிவிப்பை அஸ்வின் தனது சமூக வலைதளம் மூலம் அறிவித்துள்ளார்.

# பஞ்சாப் வீராங்கனைகளுக்கு பரிசு

13-வது மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம், மும்பை புறநகரான நவிமும்பையில் உள்ள டி.எஸ். பட்டீல் ஸ்டேடியத்தில் நடந்தது. இறுதிப்போட்டியில் இதுவரை யாரும் விரட்டிப்பிடிக்காத ஒரு இலக்கை நோக்கி ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 45.3 ஓவர்களில் 246 ரன்களில் சுருட்டினர். இதன் மூலம் இந்தியா 52 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதல்முறையாக உலகக் கோப்பையை தட்டித்தூக்கியது.

வெற்றியை நாடு முழுவதும் ரசிகர்கள் பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும் கொண்டாடினர். ஒட்டுமொத்த தேசத்தையும் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்திய இந்திய மகளிர் அணிக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள், கிரிக்கெட் பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். இந்நிலையில் இந்த உலகக்கோப்பையை வென்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்த பஞ்சாபை சேர்ந்த வீராங்கனைகளான ஹர்மன்ப்ரீத் கவுர், அமன்ஜோத் கவுர் ஆகியோருக்கு தலா ரூ. 11 லட்சமும், பீல்டிங் பயிற்சியாளர் முனிஸ் பாலிக்கு ரூ.5 லட்சமும் வெகுமதி பரிசாக வழங்கப்படும் என பஞ்சாப் கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

# லக்னோ அணியில் டாம் மூடி

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்த வருடம் நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டியில் பஞ்சாப் கிங்சை வீழ்த்தி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு கோப்பையை கைப்பற்றியது. இந்த தொடரில் 5 முறை சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்தி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடித்தது. ஐ.பி.எல். வரலாற்றில் சென்னை அணி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடிப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்த தொடரில் லக்னோ அணி 7வது இடத்தை பிடித்தது. ஐ.பி.எல். தொடரின் அடுத்த சீசன் (2026) அடுத்த மார்ச் மாத இறுதியில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அடுத்த ஐ.பி.எல். சீசனுக்கான லக்னோ அணியின் கிரிக்கெட் இயக்குநராக ஆஸ்திரேலியாவின் டாம் மூடியை நியமித்து லக்னோ நிர்வாகம் அறிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பை லக்னோ நிர்வாகம் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

# எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார் மனோஜ் பாண்டியன்

**சென்னை, நவ. 05-**

தி.மு.க.-வில் இணைந்த நிலையில் மனோஜ் பாண்டியன் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார்.

முன்னாள் சபாநாயகர் பி.எச். பாண்டியனின் மகன் மனோஜ் பாண்டியன் கடந்த சட்டசபை தேர்தலின்போது ஆலங்குளம் தொகுதியில் இருந்து அ.தி.மு.க. சார்பில் எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜெயலலிதா மறைவுக்கு பிறகு ஓ.பன்னீர் செல்வம் அணியில் இணைந்து செயல்பட்டு வந்தார்.

இந்த நிலையில் மனோஜ் பாண்டியன் எம்.எல்.ஏ. காலை அண்ணா அறிவாலயம் சென்று முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்து தி.மு.க.வில் சேர்ந்தார். அவருக்கு சால்வை அணிவித்து முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன், கனிமொழி எம்.பி., அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, எ.வ. வேலு, பி.கே.சேகர்பாபு, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு துறை தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன் ஆகியோர் உடன் இருந்தனர். இந்த நிலையில் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். சபாநாயகர் அப்பாவுவை சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தை வழங்கியுள்ளார்.

## பொன்முடிக்கு மீண்டும் கட்சிப்பதவி:
# அ.தி.மு.க. கடும் விமர்சனம்

**சென்னை, நவ. 05-**

பொன்முடிக்கு மீண்டும் கட்சிப்பதவி வழங்கப்பட்ட நிலையில் அதுகுறித்து அ.தி.மு.க. கடும் விமர்சனம் செய்துள்ளது.

அ.தி.மு.க. சார்பில் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

கோவை கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை நாட்டையே உலுக்கியுள்ள இந்த சமயத்தில், பெண்களை மிகவும் கொச்சையாக, ஆபாசமாக, பேசிய பொன்முடிக்கு மீண்டும் துணைப் பொதுச்செயலாளர் பதவியை விருது வழங்கி, அழகு பார்த்துள்ளது அறிவாலயம். ஆபாசமாக, அவதூறாக, இன ரீதியாக இழிவுபடுத்தி பேசினால் பெயருக்கு ஒரு நீக்கம் என கண்துடைப்பு நாடகம் நடத்தி விட்டு, சில மாதங்கள் சேர்த்து மீண்டும் அதே பதவி வழங்கப்படுவதே தி.மு.க. -வின் பார்முலா.

பள்ளி, கல்லூரி, ஏர்போர்ட் வரை எந்த பக்கமும் பெண்கள் பாதுகாப்பாக இருக்க முடியாத மிக மோசமான நிலைக்கு தமிழ்நாட்டின் ஆட்சியைத் தள்ளிய கட்சியான தி.மு.க. இந்த நியமனத்தின் மூலம் தமிழ்நாட்டு பெண்களுக்கு சொல்லவரும் செய்தி ஒன்றுதான். தி.மு.க. எனும் கட்சி பெண்களுக்கு எதிரானது பெண்கள் பாதுகாப்பு பற்றி தி.மு.க. -விற்கு துளியும் கவலையில்லை. இவ்வாறு அ.தி.மு.க. தெரிவித்துள்ளார்.

## ஐ.சி.சி. மகளிர் உலகக்கோப்பை சிறந்த அணி:
# 3 இந்திய வீராங்கனைகளுக்கு இடம்



**மும்பை, நவ. 05-**

மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட்டின் சிறந்த அணியை தேர்வு செய்துள்ள ஐ.சி.சி. அணியில் மந்தனா, ரோட்ரிக்ஸ், தீப்தி சர்மா ஆகிய 3 இந்திய வீராங்கனைகள் இடம் பெற்றுள்ளனர்.

**மழை காரணமாக....**

13-வது மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம், மும்பை புறநகரான நவிமும்பையில் உள்ள டி.எஸ். பட்டீல் ஸ்டேடியத்தில் நடந்தது. இதில் தங்களது முதல் மகுடத்துக்காக இந்தியா- தென் ஆப்பிரிக்கா அணிகள் மல்லுக்கட்டின. மழை காரணமாக ஆட்டத்தை தொடங்க 2 மணி நேரம் தாமதம் ஆனது. ஆனாலும் ஓவர் ஏதும் குறைக்கப்படவில்லை. இரு அணியிலும் அரையிறுதியில் ஆடிய வீராங்கனைகள் மாற்றமின்றி அப்படியே இடம் பெற்றனர்.

**நிர்ணயிக்கப்பட்ட...**

இதில் டாஸ் ஜெயித்த தென் ஆப்பிரிக்க கேப்டன் லாரா வோல்வார்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 298 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ஷபாலி வர்மா 87 ரன்களும், தீப்தி ஷர்மா 58 ரன்களும் அடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் அயாபோங்கா காகா 3 விக்கெட் கைப்பற்றினார்.

**இறுதிப்போட்டியில்...**

பின்னர் இறுதிப்போட்டியில் இதுவரை யாரும் விரட்டிப்பிடிக்காத ஒரு இலக்கை நோக்கி ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 45.3 ஓவர்களில் 246 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இந்தியா 52 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதல்முறையாக உலகக் கோப்பையை தட்டித்தூக்கியது.

**சிறந்த அணி தேர்வு...**

இந்நிலையில், இந்த தொடரில் சிறப்பாக விளையாடிய வீராங்கனைகளை வைத்து சிறந்த அணியை ஐ.சி.சி. தேர்வு செய்துள்ளது. இந்த அணியில் மந்தனா, ரோட்ரிக்ஸ், தீப்தி சர்மா ஆகிய 3 இந்திய வீராங்கனைகள் இடம் பெற்றுள்ளனர். இந்த அணிக்கு லாரா வோல்வார்ட் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## சிறந்த அணி விவரம்:

ஸ்மிருதி மந்தனா (இந்தியா), லாரா வோல்வார்ட் (கேப்டன், தென் ஆப்பிரிக்கா), ஜெமிமா ரோட்ரிக்ஸ் (இந்தியா), மரிசான் கேப் (தென் ஆப்பிரிக்கா), ஆஷ்லே கார்ட்னெர் (ஆஸ்திரேலியா), தீப்தி சர்மா (இந்தியா), அன்னபெல் சதர்லேண்ட் (ஆஸ்திரேலியா), நாடின் டி கிளெர்க் (தென் ஆப்பிரிக்கா), சித்ரா நவாஸ் (விக்கெட் கீப்பர், பாகிஸ்தான்), அலனா கிங் (ஆஸ்திரேலியா), சோபி எக்லெஸ்டோன் (இங்கிலாந்து). 12வது வீராங்கனை - நாட் ஸ்கிவர் பிரண்ட் (இங்கிலாந்து).

## நடப்பு ஆண்டில் மட்டும்
# ஐ.டி. நிறுவனங்களில் இதுவரை 1 லட்சம் ஊழியர்கள் பணிநீக்கம்

**சென்னை, நவ. 05-**

ஐ.டி. நிறுவனங்களில் இந்த அண்டில் மட்டும் இதுவரை 1 லட்சம் ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியின் வேகம் அசுரத்தனமாக இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் அது மிகவும் பிரபலமானதாக மாறி விட்டது. சாதாரண கணக்குகள், புதிர்களை தீர்ப்பதில் இருந்து பெருநிறுவனங்களை தொடங்கி நிர்வகிப்பது உள்ளிட்ட அனைத்துக்குமான யுக்திகளை தர வல்லதாக ஏ.ஐ. உருமாறிவிட்டது. இதனால் வணிகம் மற்றும் பொருளாதார ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஏ.ஐ. வளர்ச்சியடைந்து விட்டது.

செலவுகளைக் குறைத்தல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துதல் மற்றும் வருமானத்தை அதிகரித்தல் போன்றவற்றை ஏ.ஐ.யே கவனித்து கொள்ளும் அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. இந்த நிலையில் ஏ.ஐ.யை காரணம் காட்டி பெருநிறுவனங்கள் முதல் புத்தாக்க நிறுவனங்கள் வரை ஆட்குறைப்பில் தீவிரம் காட்டி வருகிறது.

இந்த ஆண்டு இதுவரையில் உலகம் முழுவதும் ஏ.ஐ.யை காரணம் காட்டி 1 லட்சம் ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து முன்னணி வணிக இணையத்தளமான 'லே-ஆப்' வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, உலகம் முழுவதும் உள்ள 218 நிறுவனங்கள் 1 லட்சத்து 12 ஆயிரத்து 732 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதிகபட்சமாக முன்னணி ஆன்லைன் வர்த்தக நிறுவனமான அமேசான் தனது ஊழியர்கள் 30 ஆயிரம் பேரை இதுவரை பணிநீக்கம் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

# செம்பரம்பாக்கம் ஏரி முழு கொள்ளளவை நெருங்குகிறது

**சென்னை, நவ. 05-**

சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமாக இருக்கும் செம்பரம்பாக்கம் ஏரி நீர்மட்டம் முழு கொள்ளளவை நெருங்குகிறது.

தமிழகத்தில் கடந்த அக்டோபர் 16-ந்தேதி தொடங்கிய வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. இதனால் தமிழகம் முழுவதும் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் என நீர்நிலைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இந்நிலையில் சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமாக இருக்கும் செம்பரம்பாக்கம் ஏரி நீர்மட்டம் முழு கொள்ளளவை நெருங்குகிறது. ஏரியின் மொத்த நீர்மட்டமான 24 அடியில் 22 அடி நிரம்பியது.

ஏரியில் இருந்து குடிநீர் தேவைக்காக மட்டும் விநாடிக்கு 100 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. உபரி நீர் திறப்பு குறித்து அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். வரும் நாட்களில் சென்னையில் மழையின் தாக்கம் அதிகரிக்கலாம் என்பதால் செம்பரம்பாக்கம் ஏரி நீர்மட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி**

# சினிமா CINI செய்திகள்

## ‘தேசிய தலைவர்’ திரைவிமர்சனம்




ஆங்கிலேயே அரசின் கை ரேகை சட்டத்தை எதிர்த்து போராடி, காங்கிரஸில் இருந்து விலகி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வழியில் பயனித்து பார்வேர்ட் பிளாக் கட்சியை தொடங்கி தென் மாவட்டங்களில் பலம் வாய்ந்த தலைவராக உருவெடுத்தவர் பசும்பொன் முத்துரமாலிங்க தேவர், அவரது வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் படந்தான் தேசிய தலைவர். சுதந்திரத்திற்கு முந்தைய காலக்கட்டத்தில் கதை தொடங்குகிறது.

ராமநாதபுரம் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் சுதந்திர போராட்டங்களில் ஈடுபட்டு வரும் முத்துரமாலிங்க தேவர், ராமநாதபுரம் சேதுபதி மன்னரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுகிறார்.

முத்துராமலிங்க தேவரின் வளர்ச்சியால் அச்சமடையும் காங்கிரஸ் தலைமை அவரை மீண்டும் காங்கிரஸில் இணைய வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறது. அது முடியாமல் போக, அவர் மீது சாதி வெறியர் என்ற அடையாளத்தை குத்த முயற்சிக்கிறது. இதனால் இமானுவேல் சேகரன் கொலை வழக்கில் முத்துராமலிங்க தேவர் முதல் குற்றவாளியாக சேர்க்கப்பட்டு கைது செய்யப்படுகிறார். தன்னை நிரபராதி என்று நிரூபிப்பதற்காக சட்ட போராட்டத்தில் ஈடுபடும் முத்துராமலிங்க தேவர், அதில் வெற்றி பெற்றாரா? அதன் பிறகு அவர் வாழ்க்கை என்னவானது, என்பது தான் படத்தின் மீதிக்கதை.

முத்துராமலிங்க தேவர் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் ஜெ.எம்.பஷீர், தோற்றம், நடிப்பு, உடல் மொழி, வசன உச்சரிப்பு என ஒவ்வொரு அசைவுகளிலும் முத்துராமலிங்க தேவரை வெளிப்படுத்தி அசத்தியிருக்கிறார். நேரு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், காமராஜர் ஆகியோரது கதாபாத்திரங்களில் நடித்திருப்பவர்கள் உருவ ஒற்றுமையில் கச்சிதமாக பொருந்திருக்கிறார்கள். இளையராஜா, தன் இசை மூலம் முத்துராமலிங்க தேவருக்கு மீண்டும் உயிரூட்டியிருக்கிறார். திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கும் ஆர்.அரவிந்தராஜ், திரைப்படத்தை சுவாரஸ்யமாக சொல்லியிருக்கிறார். மொத்தத்தில், ‘தேசிய தலைவர்’ படம் முத்துராமலிங்க தேவர் பற்றி மேலும் அறிந்து கொள்ளலாம்.

## ஆனந்த் ராஜ் நடிக்கும் ‘மெட்ராஸ் மா..ஃபியா கம்பெனி’



ஆனந்த் ராஜ், சம்யுக்தா இணைந்து நடிக்க, அண்ணா புரொடக்‌ஷன்ஸ் வி.சுகந்தி அண்ணாதுரை தயாரிப்பில், இயக்குநர் ஏ.எஸ்.முகுந்தன் இயக்கத்தில், உருவாகியுள்ள படம் ‘மெட்ராஸ் மாஃபியா கம்பெனி’. இப்படத்தில் ஆனந்த் ராஜ் தாதாவாகவும், சம்யுக்தா போலீஸ் அதிகாரியாகவும் நடித்திருக்கிறார்கள்.

இவர்களுடன் முனீஸ்காந்த், தீபா, சசிலயா, ராம்ஸ், ஆனந்த் பாபு, ஆராத்யா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஒரு தாதாவின் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களைச் சொல்லும் இப்படத்திற்கு அசோக்ராஜ் ஒளிப்பதிவு செய்ய ஸ்ரீகாந்த் தேவா இசையமைத்துள்ளார். விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ள இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இதில், இயக்குநர்கள் ஆர்.வி.உதயகுமார், ஆர்.கே.செல்வமணி, பேரரசு உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் தயாரிப்பாளர் அண்ணாதுரை பேசுகையில், நாம் தினசரி செய்தித்தாளில் படிக்கும் ஒரு விசயத்தை, அது நிஜத்தில் நடந்திருந்தால் என்னவாகும் என்பது தான் இப்படம் என்றார். பின்னர் ஆனந்த்ராஜ் பேசுகையில், பணம் நிறைய வந்து விட்டால் அது முக்கியமாகிவிடும் மகிழ்ச்சி போய்விடும். நான் நானாக வந்தவன் தான். என்னைப் பல பேர் முதுகில் குத்தியுள்ளார்கள், அதையெல்லாம் தாண்டித் தான் வந்துள்ளேன். மெட்ராஸ் மாஃபியா கம்பெனி குறித்த நேரத்தில் முடிக்கக் காரணம் இயக்குநர் தான். அவருக்கு நன்றி. இப்படத்தில் கதைக்கு நாயகனாக நடித்துள்ளேன். நல்ல படம் என்று உங்களுக்குத் தோன்றினால் வாழ்த்துங்கள் நன்றி என்றார்.

## நாளை மறுநாள் வெளியாகும் ‘அதர்ஸ்’ படம்



கிராண்ட் பிக்சர்ஸ் தயாரிப்பில், அபின் ஹரிஹரன் இயக்கத்தில் உருவாகியுள்ள மெடிக்கல் கிரைம் த்ரில்லர் திரைப்படம் அதர்ஸ் நாளை மறுநாள் வெள்ளியன்று இப்படம் வெளியாகிறது. அறிமுக நாயகனாக ஆதித்யா மாதவன் நடிக்க அவருக்கு ஜோடியாக கௌரி கிஷன் மற்றும் அஞ்சு குரியன் நடித்துள்ளனர்.

இந்நிலையில் பத்திரிக்கையாளர் சந்திப்பு நிகழ்ச்சி சமீபத்தில் நடைபெற்றது. அப்போது பேசிய இசையமைப்பாளர் ஜிப்ரான், இயக்குனர் அபின் கதை சொன்ன போதே வில்லன் கதாபாத்திரம் மிகவும் வலிமையாக இருந்தது. ஹீரோ புதுமுகம் என்றாலும் செம்ம ஸ்மார்ட்டாகவும் அட்டகாசமாகவும் நடித்துள்ளார் என்றார். தேஜாவு இயக்குநர் அரவிந்த் பேசுகையில், நமக்கு புதிய ஹீரோக்கள் தேவை. இயக்குநர் அபின் மலையாளி என்றாலும், தமிழை கற்றுக் கொண்டு திரைக்கதை எழுதியுள்ளார் — முதல் படம் போலவே இல்லை, மிக அழகாக எடுத்துள்ளார். கௌரி கிஷன் மருத்துவராக சிறப்பாக நடித்துள்ளார்.

ஜிப்ரான் எப்போதும் கதையின் உணர்வை இசையில் வெளிப்படுத்துவார்; இதிலும் அதையே செய்துள்ளார் என்றார். அதர்ஸ் இயக்குநர் அபின் ஹரிஹரன் பேசுகையில், ஒரு வருட பயணத்திற்குப் பிறகு இப்படம் உருவாகியுள்ளது.

நான் புதுமுக ஹீரோவையே தேடினேன், அதற்காக ஆதித்யா மாதவனை தேர்ந்தெடுத்தோம் — அப்போது ஆடிஷனிலேயே அவர் அசத்தினார். கௌரி, அஞ்சு குரியன், ஹரீஷ் பேரடி உள்ளிட்ட பல அனுபவமுள்ள நடிகர்கள் மிகச்சிறப்பாக நடித்துள்ளனர் என்றார்.

## ‘ராம் அப்துல்லா ஆண்டனி’ திரைவிமர்சனம்



ராம், அப்துல்லா, ஆண்டனி இந்த மூன்று பேரும், சிறு வயது முதல் நண்பர்களாக இருக்கிறார்கள். 12ம் வகுப்பு படிக்கும் நிலையில், 12 வயது சிறுவனை கடத்தி கொடூரமாக கொலை செய்கிறார்கள். ஏன் கொலை செய்கிறார்கள்? இதன் பின்னணி என்ன? என்பதை பரபரப்பும், விறுவிறுப்புமாக கொடுத்திருக்கும் படந்தான் ராம் அப்துல்லா ஆண்டனி படம். ஆண்டனியாக கப்பீஸ் பூவையார், ராமாக அஜய் அர்னால்டு, அப்துல்லாவாக அர்ஜூன் ஆகிய மூன்று பேரும், தங்களது ஆரம்பக்கட்ட செயல்கள் மூலம் அதிர வைத்துவிட்டு, அடுத்தடுத்த காட்சிகளில் இவர்களின் நட்பின் ஆழம் மற்றும் நடிப்பு பார்வையாளர்களை கலங்கடித்து விடுகிறது.

கருடன் என்ற கதாபாத்திரத்தில் திரைக்கதையின் திருப்பமாக வலம் வரும் சௌந்தரராஜன் படத்திற்கு பெரிய பலமாக உள்ளார். சாய் தீனா, வேல ராமமூர்த்தி, தலைவாசல் விஜய் திரைக்கதை ஓட்டத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். டி.ஆர்.கிருஷ்ண சேட்டனின் இசை மற்றும் பாடல்கள் ஓகே ரகம். எழுதி இயக்கியிருக்கும் ஜெயவேல், சிறுவன் கொலைக்கு பின்னணி என்ன காரணமாக இருக்கும் என்பதை பார்வையாளர்கள் யூகிக்க முடியாதபடி திரைக்கதையை சுவாரஸ்ய படுத்தி பார்வையாளர்களை ஈர்த்து விடுகிறார். மொத்தத்தில், ‘ராம் அப்துல்லா ஆண்டனி’ சமீக பாதுகாவலர்கள்.

## அபிஷன் ஜீவிந்த் - அகிலா திருமணம்



டூரிஸ்ட் ஃபேமிலி’ பட இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் திருமணம் சென்னையில் நடைபெற்றது. ‘டூரிஸ்ட் ஃபேமிலி’ படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பின்போதே, மேடையில் தனது நீண்ட நாள் காதலியான அகிலாவிடம் திருமணம் செய்ய சம்மதமா? என கேள்வி எழுப்பினார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. பள்ளி தோழியான அகிலாவுடனான நட்பு பின்பு காதலாக மாறியது.

இந்நிலையில் இருவீட்டாரின் சம்மதத்துடன் இயக்குநர் அபிஷன் ஜீவிந்த் - அகிலா திருமணம் சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இருவரது பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் புடைசூழ போயஸ்கார்டனில் இவர்களது திருமணம் நடைபெற்றது. முன்னதாக நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், நடிகர்கள் சசிகுமார், சிவகார்த்திகேயன், எம் எஸ் பாஸ்கர் , ரமேஷ் திலக், நடிகைகள் சிம்ரன், அனஸ்வரா விஜயன், சௌந்தர்யா ரஜினிகாந்த், மகேஷ் ராஜ் பசிலியான், அருண் விஷ்வா, ஷினீஷ், இயக்குநர்கள் ‘பூ’ சசி, ரஞ்சித் ஜெயக்கொடி உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். இதனைத் தொடர்ந்து அபிஷன் ஜீவிந்த் அகிலா தம்பதியினர் பத்திரிக்கை யாளர்களைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றுக் கொன்டணர்.

## தயாரிப்பாளராக மாறிய நாயகன் ஆரவ்



விடாமுயற்சி படத்தில் அஜீத்துக்கு வில்லனாகவும், ராஜபீமா உள்ளிட்ட படங்களில் நாயகனாவும் நடித்த ஆரவ் இப்போது தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கி இருக்கிறார். இந்நிறுவனம் பற்றி அவர் கூறுகையில், கடந்த பல ஆண்டுகளாக மக்கள் அளித்த அன்பும் அங்கீகாரமும், எனக்கு பெரும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் வழங்கியதோடு, இந்த அழகான திரைப்பட உலகின் ஒரு பகுதியாகவும் மாற்றியுள்ளது. இப்போது அந்த பயணத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் நோக்கில், எனது திரைப்பட தயாரிப்பு நிறுவனமான *“AARAV STUDIOS”* துவக்கத்தை பணிவுடன் அறிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.

*AARAV STUDIOS* என்பது கதை சொல்லும் கலையின் மீது உள்ள தீவிரமான ஆர்வத்திலிருந்தும், ஆழமான அன்பிலிருந்தும் உருவானது. விஷுவல் மற்றும் கிரியேட்டிவ் உலகில், இதுவரை சொல்லப்படாத இயல்பான கதைகளை உருவாக்கும் நோக்குடன், இந்த நிறுவனம் உருவாகியுள்ளது. கடவுளின் அருளும், திரைப்பட ரசிகர்களின் அன்பும் துணையாக, இதயங்களைத் தொடும் சிறந்த படங்களை தொடர்ந்து உருவாக்கும் நம்பிக்கையுடன், நன்றியுடன், எங்களின் இந்த சினிமா பயணத்தை பெருமையுடன் தொடங்குகிறோம். அன்பும் நன்றியுமுடன், ஆரவ். இவ்வாறு அவர் கூறினார்.

கண் தானம் செய்வீர்



மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.74 பழங்காநத்தம் நாவலர் சோமசுந்தர பாதியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை அமைச்சர் மூர்த்தி திறந்து வைத்தார். உடன் கலெக்டர் பிரவீன்குமார், பூமிநாதன் எம்.எல்.ஏ, துணை மேயர் நாகராஜன், கல்விக்குழுத்தலைவர் ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் சுதன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

## வெம்பக்கோட்டை ஊராட்சி பகுதிகளில் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து கலெக்டர் சுகபுத்ரா ஆய்வு



**விருதுநகர்,நவ.05-**

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசு திட்டப்பணிகள் மற்றும் நலத்திட்டங்களின் பயன்கள், கருத்துக்கள் குறித்து பயனாளிகளிடம் கலந்துரையாடினார்.

அதன்படி, தாயில்பட்டி ஊராட்சியில், மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள், மருந்துகளின் இருப்பு, அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை குறித்து கேட்டறிந்தார். மேலும் அங்கு சிகிச்சை பெற வந்த மருத்துவ பயனாளிகளிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் கலந்துரையாடினார்.

பின்னர், வெம்பக்கோட்டை வட்டம், கொங்கன்குளம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்பு முகாமினை சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ரகுராமன் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு, மனுக்கள் பதிவேற்றம் செய்வது, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை விண்ணப்பங்கள் பெறுவதற்கான சிறப்பு பிரிவுகள் உள்ளிட்டவைகளை ஆய்வு செய்து, பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு மனுக்கான தீர்வினை உடனே வழங்க வேண்டுமென அரசு அலுவலர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

அதனை தொடர்ந்து, வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தொம்பகுளம் கிராமத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம்-2026 கீழ் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்புகள் பணிகள் மேற்கொண்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்.

## தோப்பூர் அருகே ரூ.70 கோடியில் அரசு ஹோமியோபதி மருத்துவக்கல்லூரி கட்டுவதற்கான பூமிபூஜை திடீர் ரத்து

**திருமங்கலம்,நவ.05-**

மதுரை மாவட்டம் தோப்பூர் தொற்றுநோய் மருத்துவமனை அருகே கோ.புதுப்பட்டியில் ரூ.70கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி கட்டுவதற்கான பூமிபூஜை விழா திடீரென ரத்து செய்யப்பட்டது.



தமிழ்நாட்டிலுள்ள ஒரே அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது.

இங்கு 250க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இந்த கல்வாரி ஆனைபாப்பான்குளம் கண்மாயின் நீர்பிடிப்பு பகுதியில் கட்டப்பட்டிருந்ததால் கடந்தசில ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கனமழையின் போது திருமங்கலம் அரசு ஹோமியோபதி கல்லூரியினுள் வெள்ளம் நுழைந்து வகுப்பறை கட்டிடங்கள், மருத்துவமனை உள்ளிட்ட அனைத்தும் நீரில் மூழ்கியது. இதனால் கட்டிடங்கள் அனைத்தும் இடிந்து விழும் நிலை உருவானது.

இதனால் அங்கு பயிலும் மாணவ,மாணவியர் பெரும் இன்னலுக்கு ஆளாகி வந்தனர்.

இதனிடையே தமிழ்நாடு சட்டப்பேரவையில் நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் செயல்பட்டு வரும் அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு திருப்பரங்குன்றம் வட்டம் தோப்பூர் தொற்றுநோய் மருத்துவமனை அருகே கோ.புதுப்பட்டி கிராமத்தில் ரூ.70கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இதனிடையே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி மதுரை மாவட்டம் தோப்பூர் தொற்றுநோய் மருத்துவமனை அருகே கோ.புதுப்பட்டி கிராமத்தில் ரூ.70கோடி மதிப்பீட்டில் அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடங்கள் கட்டுவதற்கான பூமிபூஜை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கலெக்டர் முன்னிலையில் நேற்று நடைபெறுவதாக இருந்தது.ஹோமியோபதி கல்லூரி முதல்வர்,பேராசிரியர்கள், மற்றும் மாணவ மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்ட இவ் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த நிலையில் நிர்வாக காரணங்களுக்காக பூமி பூஜை விழா ரத்து செய்யப் படுவதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து விழாவில் கலந்து கொண்ட அனைவரும் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர்.



**மதுரை மாநகராட்சி 72-வது வார்டு பைக்காரா இபி காலனி பகுதிகளில் கவுன்சிலர் பைக்காரா பி.கருப்புசாமி ஏற்பாட்டில் தார் சாலை போடும் பணிகள் நடைபெற்றது.**



**பாரதிய ஜனதா கட்சி மதுரை மேற்கு மாவட்ட ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் பிரிவின் சார்பில் நடைபெற்ற மாவட்ட ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினார். அருகில் மாவட்ட தலைவர் பரமசிவம். மாவட்ட பொதுச் செயலாளர் கோபால், மண்டல் தலைவர் வேல்முருகன் மற்றும் ராஜமோகன் ஆகியோர் உள்ளனர்.**

மழைத்துளி மண்ணின் உயிர்துளி



திமுக தலைவரும், முதல்வருமான  மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ‘உடன்பிறப்பே வா’ என்ற தலைப்பில் சட்டமன்றத்தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் அவர் வழங்கினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# தி.மு.க.வில் இணைந்தார் மனோஜ் பாண்டியன்

**சென்னை, நவ. 05-**

தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தொகுதி எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன் தி.மு.க.வில் இணைந்தார்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தொகுதி எம். எல்.ஏ. மனோஜ் பாண்டியன். அ.தி.மு.க. வேட்பாளராக போட்டியிட்ட வெற்றிபெற்ற இவர் ஓ.பன்னீர் செல்வத்தின் ஆதரவாக இருந்து வந்தார்.

இந்நிலையில், மனோஜ் பாண்டியன் நேற்று தி.மு.க.வில் இணைந்தார். அண்ணா அறிவாலயம் வந்த மனோஜ் பாண்டியன் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார். திராவிடக்கொள்கைகளை முழுமையாக பாதுகாக்கும் தலைவராகவும், தமிழக உரிமைகளை பாதுகாக்கும் தலைவராகவும் முதல்வராக மு.க.ஸ்டாலின் செயல்படுவதால் தி.மு.க.வில் இணைந்ததாக மனோஜ் பாண்டியன் தெரிவித்துள்ளார்.



மதுரை மாவட்டம், சேடபட்டி ஊராட்சி ஒன்றியம், அத்திப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர் அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட கலெக்டர் பிரவீன் குமார், தங்கத்தமிழ் செல்வன் எம்.பி. ஆகியோர் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்ந்த அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கெண்டனர்.



சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசுத் தேர்வுகள் இயக்ககம் சார்பில் மார்ச்/ஏப்ரல் 2026-ல் நடைபெறவுள்ள இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக்கால அட்டவணையை வெளியிட்டு, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கான பணி ஆய்வினை மேற்கொண்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களை சார்ந்த 27,127 மகளிருக்கு 40.73 கோடி ரூபாய்க்கான வங்கி கடன் இணைப்புகளை வழங்கினார். இந்நிகழ்வில் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமுலு விஜயன், ஈஸ்வரப்பன், வில்வநாதன், மாவட்ட கலெக்டர் சுப்புலெட்சுமி, மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும்  அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# மாமல்லபுரத்தில் இன்று த.வெ.க. சிறப்பு பொதுக்குழு கூட்டம்

**சென்னை, நவ. 05-**

த.வெ.க. சார்பில் மாமல்லபுரத்தில் பொதுக்குழு கூட்டம் இன்று நடக்கிறது. இதில் முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தை தொடர்ந்து சட்டசபை தேர்தலை சந்திக்க தமிழக வெற்றிக் கழகம் தீவிரம் காட்டி வருகிறது. அந்த வகையில் கட்சிக்கு புதிய நிர்வாகிகளை த.வெ.க. தலைவர் விஜய் அறிவித்துள்ளார். மேலும், கட்சியின் அடுத்த கட்ட தொடர்நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விவாதிக்க மாமல்லபுரத்தில் இன்று சிறப்பு பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என்று த.வெ.க. அறிவித்துள்ளது.

இந்நிலையில், இந்த சிறப்பு பொதுக்குழு கூட்டம் தொடர்பாக நிர்வாகிகளுக்கு த.வெ.க. முக்கிய அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழகம் தலைமை நிலையம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு:- கழகத் தோழர்களுக்கு வணக்கம். கழகத் தலைவர் அவர்களின் தலைமையில், இன்று (05.11.2025, புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு, மாமல்லபுரம் ஃபோர் பாயிண்ட்ஸ் பை ஷெரட்டன் ஹோட்டலில் நடைபெற உள்ள கழகச் சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தில், பொதுக்குழுக் கூட்டத்திற்கான அழைப்புக் கடிதம் மற்றும் தலைமைக் கழக அடையாள அட்டை வைத்திருக்கும் பொதுக்குழு உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

எனவே பொதுக்குழு உறுப்பினர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதம் மற்றும் கழக அடையாள அட்டையைக் கட்டாயம் தவறாமல் கொண்டு வந்து, சிறப்புப் பொதுக்குழுவில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய அரசு மீது சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி குற்றச்சாட்டு

**புதுடெல்லி, நவ. 05-**

மத்திய அரசு மீது சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு குற்றச்சாட்டு

பல்வேறு தீர்ப்பாயங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு சீரான சேவை நிபந்தனைகளை வகுத்துள்ள தீர்ப்பாய சீர்திருத்தச் சட்டத்தின் அரசியலமைப்பு செல்லுபடியை எதிர்த்து ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு மனுக்களை விசாரிக்குமாறு மத்திய அரசு விடுத்த கோரிக்கையை சுப்ரீம் கோர்ட் நேற்று முன்தினம் நிராகரித்தது.

மனுதாரர்களின் வாதங்களைக் கேட்ட தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு, சர்வதேச நடுவர் மன்றத்தில் பங்கேற்க அனுமதிக்குமாறு அட்டர்னி ஜெனரல் ஆர். வெங்கடரமணி விடுத்த கோரிக்கையை ஏற்று விசாரணையை ஒத்தி வைத்தது. மனுதாரர்களின் வாதங்களை முடித்த பிறகு, 5 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்ற வேண்டும் என மத்திய அரசு நள்ளிரவில் தாக்கல் செய்த மனுவை ஏற்க தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மறுப்பு தெரிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் கூறுகையில்:- அரசுக்கு எதிரான வழக்கை என் தலைமையிலான அமர்வு விசாரிப்பதை மத்திய அரசு விரும்பவில்லை. மத்திய அரசு திட்டமிடப்பட்ட விசாரணைக்கு முன்னதாக நள்ளிரவில் ஒரு மனுவை தாக்கல் செய்வதன் மூலம் இதுபோன்ற தந்திரோபாயங்களில் ஈடுபடும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. மனுதாரர்களை முழுமையாகக் கேட்ட பிறகு, மத்திய அரசு இந்த மனுவை ஒரு பெரிய அமர்விற்கு மாற்ற அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தார்.

# துணை பொதுச்செயலாளராக பொன்முடி மீண்டும் நியமனம்

**சென்னை, நவ. 05-**

தி.மு.க. துணை பொதுச்செயலாளராக மீண்டும் முன்னாள் அமைச்சர் பொன்முடியை நியமித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தி.மு.க.வில் அண்மைக்காலமாக ஓரங்கப்பட்டு வந்த முன்னாள் அமைச்சர் பொன்முடியின் அரசியல் எதிர்காலம் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டு வந்த நிலையில், தி.மு.க. துணை பொதுச்செயலாளராக மீண்டும் முன்னாள் அமைச்சர் பொன்முடியை நியமித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

மேலும், அமைச்சராக உள்ள மு.பெ.சாமிநாதனும் துணை பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதால் தற்போது தி.மு.க.வில் துணை பொதுச்செயலாளராக 7 பேர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. துணை பொதுச்செயலாளராக மு.பெ.சாமிநாதன் நியமிக்கப்பட்டதால் திருப்பூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளராக பத்மநாபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

### கோவை வன்கொடுமை சம்பவம்:

# துணை ஜனாதிபதி வேதனை

**கோவை, நவ. 05-**

யாருக்கும் நடக்கக் கூடாத கொடூரம் என்று கோவை சம்பவம் குறித்து துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார்.

கோவையில் கல்லூரி மாணவி கடத்தி கூட்டு பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் வேதனை அளிப்பதாக துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். செய்தியாளர்களுகுப் பேட்டி அளித்த சிபி ராதாகிருஷ்ணன் கூறியிருப்பதாவது: -

எந்த பொண்ணுக்கும் நடக்ககூடாத கொடூரம் கொங்கு மண்டலத்தில் நடந்துள்ளது என்பது தாங்க முடியாத வேதனையை தருகிறது. குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை கிடைக்கும் என நம்புகிறேன். பாதித்த மாணவி, அவரது குடும்பத்துக்கு நம் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும்’’ என்று தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர்களை படகுடன் திருப்பி அனுப்ப இலங்கை கோர்ட் உத்தரவு

**தஞ்சை, நவ. 05-**

தமிழக மீனவர்களை படகுடன் திருப்பி அனுப்ப இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தஞ்சாவூர், மல்லிப்பட்டினம் ராமர்கோவில் தெருவைச் சேர்ந்த, வெங்கடேஷ் என்பவருக்கு சொந்தமான, பைபர் படகில், அதே பகுதியைச் சேர்ந்த, 25 40 வயதுடைய மூவர் கடந்த 11-ம் தேதி கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

அதேபோல், கள்ளிவயல் தோட்டம் பகுதியைச் சேர்ந்த, மக்கான் முகமது என்பவருக்கு சொந்தமான பைபர் படகில், 28 34 வயதுடைய, நான்கு பேர், மீன் பிடிக்க சென்றனர்.அவர்கள், ஏழு பேரும், 16-ம் தேதி காலை, மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கு, ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி வந்து, நெடுந்தீவு பகுதியில் மீன் பிடித்ததாக கூறி, மீனவர்கள், ஏழு பேரையும் கைது செய்து, இரு படகுகளையும் பறிமுதல் செய்தனர். இந்தநிலையில், கடந்த அக்.16ம் தேதி இலங்கை கடற்படையால் கைதான தஞ்சை மீனவர்கள் 3 பேரையும் படகுடன் திருப்பி அனுப்ப இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இலங்கை எல்லைக்குள் சென்றதாக கைதான மீனவர்களை விடுவித்து படகுடன் திருப்பி அனுப்ப இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ம.பி.யில் பயங்கரம்: பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்ததில் 3 பேர் பலி

**போபால், நவ. 05-**

மத்தியபிரதேசத்தின் இந்தூரில் இருந்து மெஹவ் நகருக்கு நேற்று முன்தினம் இரவு பேருந்து சென்றுகொண்டிருந்தது. அந்த பேருந்தில் 50-க்கும் மேற்பட்டோர் பயணித்தனர். சிம்ரோல் நகர் அருகே பெருஹட் பகுதியில் மலைப்பாங்கான பகுதியில் சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 30 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார் , காயமடைந்த வர்களை மீட்டு இந்தூர் மருத்துவமனையில் அனுமதித்தார். இதில், 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். அதேவேளை, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 2 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்று அம்மாநில முதல்- மந்திரி மோகன் அறிவித்துள்ளார்.